Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 09 25-07-94 திங்கட்கிழமை ஓசை 157

## ஆபிரிக்காவின் சனத்தொகை வேகமாக அதிகரிக்கிறது

அபிவிருத்தியடைந்த, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் சனத்தொகை அதிகரிப்பில் ஏற்றத் தாழ்வுகள் அதிகரித்து வருகின்றன என மதிப்பீடுகளிலிருந்து தெரியவந்துள்ளது. 2110 ஆம் ஆண்டளவில் அபிவிருத்தி அடையும் நாடுகளின் சனத்தொகை மேலும் 100 கோடியினால் அதிகரிக்கும். இந்த வருட நடுப்பகுதியில் உலக சனத்தொகை 560 கோடியாக உள்ளது. கைத்தொழில் நாடுகளின் சனத்தொகை 120 கோடியாக இருக்கிறது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலுள்ள (6ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி ஆட்சிமுறை இலகுவில் எவரும் ஒழித்து விடக்கூடியதல்ல

## ஆட்லறி தாக்குதல்

(வடமராட்சி)

வலிகாமம் பகுதிக் குடியிருப்புகள் மீது பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து அகோர ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் ஏவப்பட்டன.

பலாலியில் இருந்து நேற்று பகல் 10.15 மணி முதல் 1.00 மணிவரை ஏவப்பட்ட இருபதுக்கும் மேற்பட்ட ஆட்லறிகள் வளலாய், பத்தை

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா

(சென்னை)

ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து பாராளுமன்ற ஆட்சி முறையை கொண்டு வருவதற்காக தற்போதைய அரசியலமைப்புச் சட்டத்தை இலகுவில் புதிய அரசாங்கம் மாற்றிவிட முடியாது என முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா இந்து பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.



இன்றைய அரசியலமைப்பில் அதிகாரங்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதிக்கு நிறைவேற்று அதிகாரமும் பாராளுமன்ற உறுப்பினர்க்கு சட்டமியற்றும் அதிகாரமும் உள்ளது. இந்த அரசியலமைப்பு கடந்த 17 வருடங்களாக சிறப்பாக செயற்பட்டுவந்துள்ளது எனவும் இவ்வரசியலமைப்பை உருவாக்கியவரான ஜே.ஆர். ஜெயவர்த்தனா இந்து பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் சுட்டிக்காட்டியுள்ளார்

இந்த அரசியலமைப்பில் காலத்திற்கு காலம் சிறு திருத்தங்களை மட்டும் செய்யலாம். பாராளுமன்றம், ஜனாதிபதி ஆயுட்காலத்தை குறைக்க நடவடிக்கை எடுக்கலாம் எனக் குறிப்பிடும் ஜே.ஆர். ஜெயவர்த்தனா 1980 களின் பிரச்சினைக்குரிய காலகட்டங்களூடாக நாட்டை கொண்டு வர ஜனாதிபதி முறையும் இன்றைய அரசியலமைப்பு முறையுமே உதவியது என்றார். இன்று அடைந்துள்ள பலவற்றை பாராளுமன்ற முறை மூலம் நாம் அடைந்திருக்க முடியாது.

எதிர்க்கட்சி ஆட்சியை பிடிக்குமானால் பாராளுமன்றத்திற்கும் ஜனாதிபதிக்கும் இடையில் சச்சரவுகள் எழத் தேவையில்லை. ஜனாதிபதி பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலமுள்ள கட்சியுடன் ஒத்துப் போக வேண்டும். பாராளுமன்ற தீர்மானம் ஜனாதிபதியின் மனச்சாட்சிக்கு விரோதமாக தெரியாது விட்டால் அவர்பாராளுமன்றதீர்மானத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## எரிந்த நிலையில் இளைஞனின் சடலம்

வவுனியா இரண்டாம் குறுக்குத் தெருவில் வெற்றுக் காணி ஒன்றினுள் எரிந்த நிலையில் ஆணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இவர் அடித்துக்கொல்லப்பட்ட பின் பெற்றோல் ஊற்றி கொளுத்தப்பட்டிருக்கலாம் என பொலிசார் கூறியுள்ளனர்.

தனியார் ஒருவருக்கு சொந்தமான சைக்கிள் திருத்தும் கடையில் வேலை பார்த்த சுப்பிரமணியம் (25) என்பவரின் சடலமே இது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

## எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் யாழ். நகரப் பகுதியை நோக்கி நேற்றிரவு எறிகணைத் தாக்குதலினை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று இரவு 9. 45 மணியளவில் மேற்படி பகுதியில் இருந்து ஏவப்பட்ட எறிகணைகள் யாழ். நகரப் பகுதியில் பாரிய சத்தத்துடன் வீழ்ந்து வெடித்தன இதனால் சேதம் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவரவில்லை.

## ரயிலில் கொழும்பு சென்ற இளைஞரைக் காணவில்லை

(கொழும்பு)

வவுனியாவிலிருந்து கொழும்பு சென்ற இரவு தபால் ரயிலில் கடந்த 11 ஆம் திகதி பயணம் செய்த வடபகுதி இளைஞர் ஒருவர் இதுவரை வீடு திரும்பவில்லை என அவரின் மனைவி பொலிசில் புகார் செய்துள்ளார்.

தெல்லிப்பழை பன்னாலை நவகிரியைச் சேர்ந்த பாலன் ராஜகுலசிங்கம் (24) என்பவரே காணாமற் போய்விட்டதாக அவரின் மனைவி கூறினார். இவர்கள் தெல்லிப்பழையில் இடம் பெயர்ந்து கோவில் திருக்குளம் பகுதியில் வசித்து வந்தனர். கொழும்பில் கடமையாற்றும் இவர் வவுனியாவிலிருந்து சம்பவ தினம் கொழும்பு சென்ற போது குருநாகலில் இவர் பயணச் சீட்டு இல்லாது

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## போராளி வீரச்சாவு



## வடக்கு-கிழக்குப் பிரச்சினை

ராஜகுலசிங்கம் (24) என்ப

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## கொழும்பு - வவுனியா ரயிலில் தீவிர சோதனை

(கொழும்பு)

கொழும்பிலிருந்து வவுனியா செல்லும் இரவு ரயில் பயணிகள் பெரும் சோதனைக்குள்ளாகி வருகின்றனர். ரயில் அதிகாலை 3.30 மணிக்கு அநுராதபுரம் அருகேயுள்ள சிறு ரயில் நிலையம் ஒன்றினருகே வந்ததும் திடீரென நிறுத்தப்படுகிறது.

பயணிகள் அனைவரும் தட்டியெழுப்பப்பட்டு மூட்டை முடிச்சுகளுடன் கீழிறக்கப்படுகின்றனர் பின்னர் ரயில் அடுத்த புகையிரத மேடைக்கு கொண்டு செல்லப்படுகிறது. இதே சமயம் மேடையில் வைத்து பயணிகளும் பொதிகளும் பலத்த சோதனைக்குள்ளாக்கப்படுகின்றனர்.

அதிகாலையில் திடீரென பயணிகள் கீழிறக்கப்படுவதால் அவர்களும் என்னவோ ஏதோ என பதற்றத்துடன் தமது பொதிகளையும்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## வரும் பொதுத்தேர்தலுடன் ஐ.தே.கவின்கதை முடிந்தது

### முன்னாள் அமைச்சர் செல்லச்சாமி

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலுடன் ஐ.தே.கவின் 17வருட கால ஆட்சி முடிவுக்கு வரும். அதன் பின் ஐ தே. க. ஒரு போதும் ஆட்சிக்கு வராது. இவ்வாறு பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசிய முன்னாள் இராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி தெரிவித்தார்.

திருமதி சந்திரிகாவின் புதிய ஆட்சி இந் நாட்டில் ஏற்படவுள்ளது. இதை ஐ. தே. கவோ தொண்டமானோ முறியடிக்க முடியாது. தோட்ட தொழிலாளரை ஏமாற்றிய காலம் மலையேறி விட்டது நான் 28 ஆண்டு காலம் ஐ தே க. ஆதரவாளராக இருந்தேன். இதற்கு ஐ. தே. க. எனக்கு மதிப்பளிக்கவில்லை. என்னை புறக்கணித்து விட்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

### ஈ.பி.ஆர்.எல்.எப். ஆதரவு

## சுவரொட்டி ஒட்ட சென்றவர் கடற்படையிடம் தஞ்சம்

(கொழும்பு)

அனலைதீவில் நேற்று முன் தினம் ஈ. பி ஆர். எல். எப். குழுவினர் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்தபோது அவர்கள் ஈ.பி.டி.பி யினரால் திட்டமிட்டு மிரட்டப்பட்டதாகவும் அச்சமடைந்த ஈ.பி. ஆர்.எல்.எப். குழுவினர் அருகிலிருந்த கடற்படை முகாமில் தஞ்சமடைந்ததாகவும் தெரியவருகிறது.

ஈ பி.ஆர்.எல்.எப். ஒட்டிய சுவரொட்டிகளில் ஈ.பி.டி பி.க்கு எதிரான வாசகங்கள் காணப்பட்டதனால் இம்முறுகல் நிலை ஏற்பட்டதாக கூறப்படுகிறது, ஈ.பி.ஆர், எல்.எப். இனரின் இந் நடவடிக்கையைஈ.பி.டி.பி யினர்

( 6 ஆம் பக்கம் பார்க்க )



### கப்டன் முத்து [அழகமுத்து]

யாழ். மாவட்டத்தில் நேற்று முன் தினம் ஏற்பட்ட எதிர்பாராத விபத்தொன்றில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவடைந்த கப்டன் முத்து · அழகமுத்து (செல்லையா தவச்செல்வம், இணுவில் கிழக்கு, இணுவில்.) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## துணைப்படைவீரர் வீரச்சாவு



### வீரவேங்கை ஆறுமுகம் தவராஜா

முல்லை மாவட்டத்தில் கடந்த 20 ஆம் திகதி துணைப்படை வீரர் ஒருவர் சுகவீனம் காரணமாக வீரச்சாவு அடைந்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதப் பிரச்சினையல்ல

### சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் நிலவும் பிரச்சினை பயங்கர வாதப் பிரச்சினையல்ல ஜனாதிபதி விஜேதுங்கா இப் பிரச்சினையை பயங்கரவாதம் என்று கூறுவதை நான் ஏற்கவில்லை இவ்வாறு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கொழும்பு வாரப்பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டி ஒன்றின் போது குறிப்பிட்டார்.

அப்பேட்டியின் விபரம் வருமாறு:

கேள்வி; பாராளுமன்ற தேர்தலில் பொது ஜன ஐக்கிய முன்னணி வெற்றி பெறின் நீங்கள் பிரதமர் பதவியை ஏற்பீர்களா?

பதில்: பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்ற கட்சியின் தலைவரை அரசு அமைக்குமாறு ஜனாதிபதி அழைக்கவேண்டும். ஆதலால் எம் கட்சி பெரும்பான்மை பெற்றால் எம் அணியின் தலைவர் எனும் வகையில் அரசை அமைக்குமாறு அவர் என்னை அழைக்க வேண்டியவராவார்.

கேள்வி: ஐ. தே- க வினதும் பொது ஜன ஐக்கிய முன்னணியினதும் தேர்தல் விஞ்ஞாபனங்களில் அதிக வேறுபாடு இல்லை. ஐ- தே- கவை விட பொ- ஜ- ஐ- மு- புதிய திட்டம் ஏதும் அறிவித்துள்ளதா?

பதில்: பெரிய வேறுபாடுகள் உள்ளன. எங்கள் எண்ணங்களை ஐ- தே- க- பிரதி பண்ணியிருக்கலாம் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வாசித்தால் அது ஐ தே கவின் விஞ்ஞாபனத்தைவிட அதிகளவில் வேறுபட்டுள்ளது.

கேள்வி: பொதுஜன ஐக்கிய முன்னணி தேர்தலில் வெற்றி பெற்றால் உடனடியாகக் கிடைக்கக் கூடிய நன்மை என்ன?

பதில்: வாழ்க்கைச் செலவினத்தைக் குறைப்பது எமது உடனடி நடவடிக்கை

கேள்வி: மூன்றிலிரண்டு பெரும்பான்மைகிடையாது விட்டால் ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்பு போன்ற அரசியல் சட்ட மாற்றங்களை கொண்டுவர என்ன திட்டம் வைத்துள்ளீர்கள்?

பதில்: ஜனாதிபதி ஆட்சி முறை மாற்றத்திற்கான அரசியல் சட்ட மாற்றத்தை அமுல் செய்வோம்

(6ஆம் பக்கம்பார்க்க)

## பொதுஜன ஐக்கிய முன்னணி பிரபாவுக்கெதிராக குரல் கொடாது

### ஜனாதிபதி விஜேதுங்கா தெரிவிப்பு

(கொழும்பு)

பிரபாகரனுக்கு எதிராக பொதுஜன ஐககிய முன்னணி குரல் கொடுக்க மாட்டாது. வடக்கு-கிழக்கு பிரச்சினை தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஸ்திரமான நிலைப்பாடு கிடையாது. அது இந்நாட்டை இரு துண்டுகளாக்க சூழ்ச்சி செய்து வருகின்றது என டி. பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

தென்பகுதியில்இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டங்களிலேயே டி. பி. விஜேதுங்கா இவ்வாறு கருத்து தெரிவித்து வருகிறார். அண்மையில் மதவாச்சிப் பகுதியில் இடம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சு. க. வேட்பாளரை கொலை செய்ய முயற்சி

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபால டி. சில்வாவை பஸ் ஒன்றால் மோதி கொலை செய்ய முயற்சி எடுக்கப்பட்டதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இவர் இம் முறையும் எதிரணி சார்பில் கொழும்பில் போட்டியிடுகிறார்.

நேற்று மாலை கொழும்பு தெமட்டக்கொட பகுதியில் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது இவரை கொல்ல முயற்சி எடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

தெமட்டக்கொட புகையிரத கடவைக்கு அருகே சன நெரிசல் காணப்பட்டதால்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச அவதானிகள் குழு 10 ம் திகதிகொழும்புவரும்

(கொழும்பு)

எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறவுள்ளபொதுத்தேர்தலை கண்காணிக்கசர்வதேச அவதானிகள் அழைக்கப்படுவர் என தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். இதற்கு சகல அரசியற் கட்சிகளும் சுயேட்சை குழுக்களும் இணக்கம் தெரிவித்துள்ளன.

இவ்அவதானிகள் குழு எதிர்வரும் 10 ஆம் திகதி கொழும்பு வரும் இக் குழுவினரில் பலதரப்பட்டவர்கள் உள்ளனர் இவர்கள் தத்தமது நாடுகளை பிரதிநிதித்துவம் செய்யாது சர்வ தேச அவதானிகள் என்ற வகை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆதரவாளர் வீரச்சாவு

திருக்கோணமலை வெருகல் முகத்துவாரத்தில் கடந்த 18 ஆம் திகதி மதியம் 1.45 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் தாக்கியதில் விடுதலைப் புலிகளின் முழு நேர ஆதரவாளர் சித்திர

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**மில்க்வைற்**

சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ பேருரையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 450 கிறாம் சலவைப்பவுடர் வாங்குபவர்கட்கு சுவாமி விவேகானந்தரின் பலவர்ணப் படம் அன்பளிப்பாக வழங்குகிறோம். ''மில்க்வைற்''

(சி-9977)

**ந. சுந்தரர்பிள்ளையின் 'அக்கரைச் சீமையில்'**

'இங்கிலாந்திற்குச்செல்லாமலேயே அந்த நாட்டையும் இலண்டன் மாநகரத்தையும் கண்முன் காட்சிப்படுத்த முனைந்துள்ளார். அதில் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளார் :- ஈழநாதம் வெள்ளி மஞ்சரியில் வவுனியா திலீபன்

(8898)

## கிராம ஆய்வு

தமிழீழவிடுதலைப்புலிகளின் வன்னி மாவட்ட அரசியல் துறையினரின் ஆதரவுடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் பின்தங்கிய கிராமங்களை மேம்படுத்துவதற்கான திட்டங்களை இனங்காணும் நோக்குடன் கிராமிய பாசறை நடாத்தி வருகின்றனர்

அதற்காககிளிநொச்சிமாவட்டத்தில் விவேகானந்தநகர், உதயநகர் ஆகிய கிராமங்களில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் புள்ளி விபரக்கிளை புள்ளி விபரங்களைத்திரட்டிஇக்கிராமங்களின் அனைத்துவளங்கள் பற்றிய ஆய்வுகளை செய்து வருகின்றனர்.

அத்துடன் பாரதிபுரம் கிழக்கு, பாரதிபுரம் மேற்கு பாரதிபுரம் தெற்கு ஆகிய கிராமங்களில் இவ் ஆய்வினை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## துப்பாக்கி வெடித்து இளைஞர் பலி

(கொழும்பு)

பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் கைத்துப்பாகி தவறுதலாக வெடித்தமையால் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்,

தென் மாகான சபை உறுப்பினர் ஒருவரின் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றும் ஆர். பி. பத்மசிறி

# எதிரி பணத்திற்கு வாங்க உயிர்கொடுத்து பெறுகிறோம்

-தமிழ்க்கவி

(தென்மராட்சி)

பெரும் யுத்தத்திற்கு மக்கள் தயாராக வேண்டும் இல்லையேல் எதிரி எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் வருவான். இதை தடுப்பதானால் அனைவரும் ஆயுதம் ஏந்த வேண்டும்.

இவ்வாறு கிராமம் தோறும் இடம் பெற்று வரும் சமகால கருத்தரங்கு கொடிகாமப்பகுதியில் இடம் பெற்ற போது உரைநிகழ்த்திய விடுதலைப்புலிகள் பாரதி இல்லத்தைச் சேர்ந்த தமிழ்க்கவி மக்களுக்கு அறைகூவல் விடுத்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றிய போது, மக்கள் இன்று தேர்தல் மூலம் ஒரு தீர்வுவரும் என்று எண்ணி மயங்கி இருக்கிறார்கள். ஆனால் ஒன்றை மட்டும் மக்களுக்கு ஆணித்தரமாக சொல்ல வேண்டியது எமது கடமை. நாம் உங்களுக்கு முன்னரே விளக்கி வருகின்றோம், அரசானதுதேர்தலை திட்டமிட்டு நடாத்த சகல நடவடிக்கையும் எடுத்துவருகின்றது ஆனால் இதில் எமக்கு எந்தவித இலாபமோ நட்டமோ கிடைக்கப் போவதில்லை. மக்கள் அனைவரும் எதிரிக்கு எதிராக ஆயுதம் ஏந்தி எம் மண்ணில் இருந்து எதிரியை விரட்டி விடுவதே எம் பிரச்சினைக்கு தீர்வு எமது மண்ணை மீட்க அனைவரும் அணிதிரள வேண்டும். தேர்தலில் எந்த கட்சி ஆட்சியில் வந்தாலும் சரி தமிழர் பிரச்சினைக்கு தேர்தல் முடிந்தவுடன் இராணுவத் தீர்வு தான். அரசு ஒரு பாரிய யுத்தத்தினை நடத்த பல கோடி ரூபா கணக்கில் ஆயுதத்தை கொள்வனவு செய்தும் புதிய தளபதிகளை மாற்றம் செய்தும் பாரிய திட்டம் தீட்டி வருகின்றது. ஆனால் இந்த வேளையில் நாம் தயாராக இருக்கின்றோமா? இல்லை மக்கள் பிரச்சினை தீரும் என்று தேர்தலைபார்த்து மயங்கி இருக்கிறார்கள். இது மாற வேண்டும் நாம் எமது போராட்டத்தில் எத்தனை மாவீரர்களை இழந்துள்ளோம் இவர்கள் விட்ட பாதையில் செல்ல ஆயுதம் எம்மிடம் தேவையானது உண்டு. எதிரி உலக நாடுகளில் பணம் கொடுத்து வாங்குகின்றான். நாம் எதிரியிடம் உயிரை கொடுத்து வேண்டுகிறோம் அந்த ஆயுதம் எம்மிடம் தூக்க ஆள் இல்லாமல் தூங்குகின்றது. இதை தூக்குவதற்கு இளைஞர்கள், யுவதிகள், எம்மோடு வர வேண்டும். அப்போது தமிழீழம் மீட்கப்படும் என்றார், இவரைத் தொடர்ந்து திரு. பொன்தியாகம். அரசண்ணா உரை நிகழ்த்தினர் இறுதியில் குறும்படம் காண்பிக்கப்பட்டது. இதில் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டனர்-

(86)

## முன்னாள் இராணுவத்தினர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

மாநகரசபை உறுப்பினர் விமலரட்ண பெர்னான்டோவின் வீட்டிற்குள் புகுந்து அவரது கைத்துப்பாக்கி, பணம், தங்கநகைகள் முதலியவற்றை கொள்ளையடித்துச் சென்ற முன்னாள் இராணுவத்தினர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொட்டாஞ்சேனை புளூமென்டால் வீதியிலுள்ள மாநகரசபை உறுப்பினர் வீட்டில் கொள்ளையிட்ட இவரை கொட்டாஞ்சேனைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

## பொலிஸ் சார்ஜன்ட் கைதானார்

(கொழும்பு)

போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டுவந்த நபர் ஒருவரை பயமுறுத்தி பணம் பறித்து வந்தமை தொடர்பாக பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் வாகனப் போக்குவரத்துச் பிரிவைச்சேர்ந்த இந்த சார்ஜன்ட் கொழும்பு பிரதம நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டதை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து ஒவ்வொன்றும் 25 கிராம் கொண்ட

## எறிகணை வீச்சு

(குருநகர்)

நேற்று முற்பகல் 10.30 மணியில் இருந்து 11 மணி வரை மண்டைதீவில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா ராணுவம் யாழ்-கரையோரப் பகுதிகளை நோக்கி எறிகணை தாக்குதலை மேற்கொண்டது.

## நினைவு கூருகின்றோம்...

### 25-07-1994...

1983-ம் ஆண்டு இதேதினத்தில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் சிறை அதிகாரிகளின் உதவியுடன் சிங்களக்காடையர்களினால் படுகொலை செய்யப்பட்ட,

**புறோக்கா** (சின்னப்பு சத்தியேஸ்வரன் - அச்சுவேலி தெற்கு - யாழ்)

**புத்தூர் மாமா** (தாமு கந்தையா - புத்தூர் கிழக்கு - யாழ்)

★ **இராசகிளி** (கிருஷ்ணபிள்ளை நாகராசா - கட்டைபறிச்சான், மூதூர் - திருமலை)

ஓ **தங்கத்துரை** (நடராசா தங்கவேல் - தொண்டமானாறு)

ஓ **குட்டிமணி** (செல்வராசா யோகச்சந்திரன் - வல்வெட்டித்துறை)

ஓ **ஜெகன்** (கணேசானந்தன் ஜெகநாதன்-கணேச பவனம் - தொண்டமானாறு)

ஓ **செனற்றர்-நடேசதாசன்** (வைத்திலிங்கம் நடேசதாசன் - சிவன்கோயிலடி-வல்வெட்டித்துறை)

ஓ **தேவன்-வெள்ளை மாமா** (செல்லத்துரை சிவசுப்பிரமணியம்-வளலாய், அச்சுவேலி-யாழ்)

ஓ **சிவபாதம் மாஸ்ரர்** (நவரத்தினம் சிவபாதம் - பத்தமேனி, அச்சுவேலி - யாழ்)

இதே சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்ட மற்றும் பல தமிழர்கள்.

கிளி, பரந்தன் சந்தியில் சிறிலங்கா ராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட கண்டாவளையைச் சேர்ந்த பொதுமகன்.

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட பருத்தித்துறை-புலோலி, சாளம்பையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

கொழும்பு - நாரகன்பிட்டியில் சிங்களக் காடையர்களினால் அலவாங்கினால் அடித்துக் கொல்லப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1986-ம் ஆண்டு திருமலை-மூதூர் ஆலிம்சேனைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

★ **நசீம்-கஜன்** (அப்துல் மானாப் முகமது நசீம் - மூதூர் திருமலை)

மன்னாரில் சுவரொட்டி ஒட்டும்போது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

★ **அசோக்** (பெருமாள் யோகநாதன் - சாவற்காடு - மன்னார்)

1987-ம் ஆண்டு யாழ் - கோட்டைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**யோகன்** (ஐயாத்துரை யோகேந்திரன்-புன்னாலைக் கட்டுவன் - யாழ்)

1989-ம் ஆண்டு வடமராட்சியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 03 பெண்கள் உட்பட 05 தமிழர்கள்.

1990-ம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**யசோ** ( - ராஜ்குமார் - வல்வெட்டித்துறை)

கருகலேரியில் சிறிலங்காஇராணுவத்தினருடனான

## 3 ஆம் ஆண்டு நினைவாக



மலாவு 1974. 2. 24

வீரச்சாவு 1991. 7. 29

**வீரவேங்கை ராஜன்**


(குமாரசாமி குணராசா)

குணத்தில் குன்றாத குல விளக்கே - எம் குணராசா
ராஜன் என்னும் பெயர் தாங்கி - எதிரிமுன்
ராஜ நடை போட்டு வீறுடன் போரிட்டாய்
வீரவேங்கையே உன் விருப்பம் என்ன
தம்பி தலைமையில் தமிழீழந்தானே
வென்றெடுப்போமடா! உன்னுடன்
மரணித்த தோழர்களுக்கும் கூறு
நிச்சயம் தாயகம் பிறக்கும், தாகம் தீரும்.

கேணியடி, கொக்குவில். - குடும்பத்தினர்

(சி - 9980)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. கதிர்ப்பிள்ளை நடராசா**

(தோடம்பழுப்)

வ. பி. நோ. ச. பரிசோதகர்

தோற்றம்: 12-01-1934

மறைவு: 21-07-1989

இ: 25 - 07 - 1994

உத்தியோகத்தராகக் கடமை யாற்றும் ஆர். பி. பத்மசிறி என்ற பொலிஸ் கான்ஸ்டபி ளின் கைத்துப்பாக்கி வெடி த்த போது எச். டபிள்யூ சமன் என்பவர் உயிரிழந்தார். இச் சம்பவம் தொடர்பாக பொலிசார் விசாரணை மேற் கொண்டுள்ளனர்.

## ஆங்கில வகுப்பு

(கொழும்புத்துறை)

பாஷையூர் புனித அந்தோனியார் மக்கள் முன்னேற்ற சனசமூக நிலையம் சார்பில் நிலையத் தலைவர் திரு எஸ். கே. செபஸ்ரியாம் பிள்ளை தலைமையில் கடந்த 20 ஆம் திகதி புதன்கிழமை மாலை மின் ஒளியில் ஆங்கில வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

இவ்வகுப்புமாலை 5 00 மணி தொடக்கம் 6 00 மணி வரை இடம் பெற்று வருகிறது. (24)

றும் 25 கிராம் கொண்ட நான்கு பக்கட் ஹெரொயின் போதைப் பொருளும், ஒரு றிவால்வரும், ஐந்து சுற்று ரவைகளும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொண்டது.

ஏவப்பட்ட ஐந்துக்கும் மேற்பட்ட எறிகணைகள் கடல் நீரில் வீழ்ந்து பலத்த சத்தத்துடன் வெடித்தன. (21)


### திருக்கணிதம்

## இடமாற்ற அறிவித்தல்

இதுவரை சாவகச்சேரி புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் 6-7-94 முதல் சாவகச்சேரி பிரதான வீதி, கோட்டடிக்கு முன் பாக இயங்குகின்றது என்பதை சகல வாடிக்கையாளர், அன்பர்கள், ஆதரவாளர் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

சகல விதமான அச்சு வேலைகளும் சிறந்த முறையில், குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

கோட்டடி,
பிரதான வீதி,
சாவகச்சேரி.

(5098)

திருக்கணிதம்.



### பெயர் மாற்றம்

## சன்ஸ்ரார் ஜுவல்லறி

147B (337) கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
என்னும் நகை வியாபார நிறுவனம்
22 - 07 - 94 தொடக்கம்

## "இசைவாணி' நகை அகம்"

என்னும் தூய தமிழ் பெயரில்
147 B (337)லெப். கேணல் சந்தோஷம் தெரு,
என்னும் அதே இடத்தில் இயங்கும் என்பதனை எமது வாடிக்கையாளர், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

147B [337] லெப். கேணல் சந்தோஷம் தெரு,
[கஸ்தூரியார் வீதி] யாழ்ப்பாணம்.

நிர்வாகம்
இசைவாணி நகைஅகம்

(8932)


கறுகலேரியில் சிறிலங்காஇராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**அரி** (அழகையா சிதம்பரம் - அலம்பில் - மணலாறு)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட ஆறுமுகத்தான் குடியிருப்பைச் சேர்ந்த 04 தமிழர்கள்.

நெல்லியடியில் இடம்பெயர்ந்தோர் தங்கியிருந்த அரிசி ஆலை ஒன்றின் மீது சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்டவிமானக் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

1991-ம் ஆண்டு ஆ. க. வெ. நடவடிக்கையின் போது விழுப்புண்ணடைந்திருந்து யாழ்மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும்போது வீரச்சாவெய்திய,

**தேவா** (சின்னத்துரை சந்திரமோகன்-வாகரை-மட்டு)

ஆ. க. வெ. நடவடிக்கையின்போது ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**நிமல்** (தனிநாயகம் சதீஸ்குமார்-எழுவைதீவு 03-யாழ்)

**அகிலன்** (வேலுப்பிள்ளை கந்தசாமி - நெடுங்கேணி-மணலாறு)

**கிறிஸ்ரி** (வேலுப்பிள்ளை வேதநாயகம்-குருத்தலடி, சுழிபுரம் மேற்கு-யாழ்)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போது படுகொலை செய்யப்பட்ட விவசாயியான வேப்பவெட்டுவானைச்சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1992-ம் ஆண்டுமட்டு-பழுகாமம் பகுதியில் 24-7-92 அன்று சிறிலங்கா இராணுவ முகாம்காவலரண் நகர்ப்பின்போது விழுப்புண்ணடைந்திருந்துவீரச்சாவெய்திய,

**2-ம லெப். சண்முகப்பிரியன்-அச்சுதன்** (மாணிக்கம் நித்தியானந்தன்-மல்வத்தை-அம்பாறை)

1993-ம் ஆண்டு மணலாறு - மண்கிண்டிமலை சிறிலங்கா இராணுவமுகாம் தகர்ப்பு நடவடிக்கையின் போது வீரச்சாவெய்திய,

**லெப்.நக்கீரன்-செந்தூரன்** (சோமசுந்தரம் அரசரத்தினம்-பழுகாமம்-மட்டு)

**லெப்.தமிழ்மாறன்-வாஸ்** (செல்லையா வேதவனம்-கோயில்போரதீவு-மட்டு)

**லெப்.விமலன்-வில்வன்** (கிருஷ்ணபிள்ளை புண்ணியமூர்த்தி-வீரமாகாடு, தோப்பூர்-திருமலை)

**2-ம் லெப்.சியாமணி** (யோகச்சந்திரன் ரவிசங்கர்-திருமலை)

**லெப். ஈழவேந்தன்-அமீர்** (கந்தசாமி விமலேந்திரன் - கனகராயன்குளம் - வவுனியா)

**லெப். துரைக்கண்ணன்-விக்ரம்** (வைத்திலிங்கம் தயானந்தன் - வட்டக்கச்சி - கிளிநொச்சி)

**லெப். குயிலன்** (சிவப்பிரகாசம் நந்தகுமார் - மூளாய் தெற்கு - யாழ்)

**லெப். திருமலைநம்பி-பெனான்டோ** (வரப்பிரகாசம் யுகதீபன் - 2-ம் ஒழுங்கை - கொழும்புத்துறை)

**லெப். அழகப்பன்-காந்தி** (கபிரியல்பிள்ளை யோதிகாவலன் - ஏழாலை கிழக்கு -யாழ்)

**2-ம் லெப். புகழரசன்** (சின்னத்துரை கோணேஸ்வரன் - காரைநகர் - யாழ்)

### ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் எமது அமைப்புச் சாராமல் தாயக விடுதலைக்காகப் போராடியவர்கள்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-9972)

12 - 01 - 1934      21 - 07 - 1989

**திதி: 25 - 07 - 1994**

கண்ணை இமை காப்பது போல்
வண்ணமுறக் காத்து வந்தீர்
பாழும் விதியாலே எம்மை விட்டு
பாதியிலே சென்றுவிட்டீர்
ஆண்டு ஐந்து சென்றாலும்
ஆறவில்லை நம் சோகம்
நீங்கவில்லை எம் நெஞ்சை விட்டு.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கும்,

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

(8891)

மனைவி, மகன்,
சகோதரர்கள்.

Tellur Branch Library




# கணக்கியல் A/L

## பரீட்சை தொடர்பான நோக்கு

க. பொ. த. உயர்தர வகுப்பில் கணக்கியலை ஓர் பாடமாகக் கற்கும் மாணவர்கள் பரீட்சையில் ஏனைய மூன்று பாடங்களை விட கணக்கியல் வினாத்தாள் தொடர்பாக சுடினத்தன்மையை உணர்கின்றனர். கணக்கியல் பாடப் பரீட்சை நடைபெறும் வேளையில் பரீட்சை மண்டபங்களில் மாணவர்கள் படும் அவதிகளையும், பதற்றங்களையும், தடுமாற்றங்களையும் பரீட்சை மேற்பார்வையாளர்கள் அவதானிப்பதும் விமர்சிப்பதும் வழமை. பரீட்சை நெருங்கி வரும் இவ்வேளையில் மாணவர்கள் கணக்கியல் வினாத்தாளை சரியான முறையில் அணுகுவதற்கு கணக்கியலில் எனது பத்து வருட கால கற்பித்தலின் அனுபவ வாயிலாக சில விடயங்களைக் குறிப்பிடலாமென எண்ணுகின்றேன்.

அநேகமான 92,93 ஆண்டு உயர்தரப் பரீட்சைகளில் ஒப்பீட்டு ரீதியாகக் கணக்கியல் பாட பெறுபேறுகள் யாழ். மாவட்டத்தில் குறைவாகவே உள்ளது. இந்நிலைக்கு ''கற்கும் கால அளவு'' மிகக் குறைவாக இருந்தமையினால் பாடத்திட்டங்களைப் பூர்த்தி செய்வதிலேற்பட்ட சிக்கல்கள் பிரதான காரணமாக அமைந்ததுடன், பின்வரும் விடயங்களும் காரணங்களாக அமைகின்றன.

கணக்கியல் வினாத்தாள் பகுதி 1, பகுதி 11 என்பன ஒவ்வொன்றும் மூன்று மணி நேரங்களை உடையதாக இருக்கின்றது. இந் நேரத்தினுள் மாணவர்கள் ஒவ்வொரு பகுதியிலும் தலா ஏழு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டியிருப்பதும் ''தவிர்க்கக் கூடிய வினாக்களின்'' எண்ணிக்கை பெரும்பாலும், ஒரேயொரு வினாவாக அமைவதுமே பெருமளவு மாணவர்களின் பின்னடைவுக்குப் பிரதான காரணமாகின்றது. இச்சிக்கலை நிவர்த்திப்பதற்கு மாணவர்கள் ஒவ்வொரு பாட அலகையும் தெளிவாக விளங்கி ஞாபகப்படுத்திக் கொள்வதுடன் ஒவ்வோர் வினாவையும் அதற்கான நேர அளவினுள் செய்து முடிக்க போதியளவு பயிற்சிகளை சுயமாகவே செய்து பழகிக் கொள்ள வேண்டும். இவை ஆரம்பம் முதலே ஒழுங்காகக்கடைப் பிடிக்கப்பட்டு வருவது நன்று.

உதாரணமாக: பகுதி 1-ல் கம்பனி முடிவுக் கணக்கும் பகுதி (ii)-ல் பங்குடமை முடிவுக் கணக்குமே மாணவர்கட்கு பெருமளவு நேர விரயங்களை உண்டு பண்ணும் வினாக்களாக உள்ளன. அத்துடன் இவை பெரும்பாலும் 35 புள்ளிகளுக்கான கட்டாய வினாக்களாகவும் உள்ளன. ஆகையால், மாணவர்கள் இத்தகைய வினாக்களைச் சுயமாகவே 50 நிமிடங்களுக்குள்ளாக செய்து முடிக்க போதிய பயிற்சிகளைப் பெறுவதுடன், இவற்றில் வெவ்வேறு மாதிரியான (Patterns) வினாக்களையும் பயிற்சி செய்ய வேண்டும். அத்துடன் கணக்கியலில் குறிப்பிட்ட சில பகுதிகளை மட்டும் தெரிவு செய்து கற்கும் முறையைத் தவிர்த்துக் கொள்ளல் நன்று.

அடுத்தது: மாணவர்களின் பெரும் தவறாக அமைவது 'மிகுந்தவோர்எதிர்பார்க்கையுடன்'' பரீட்சைக்குச் செல்வதாகும். ஆனால், பரீட்சை மண்டபத்தில் வினாத்தாளைப் பெற்று பார்வையிடும்போது எதிர் பார்க்கை தவறுவதால் ஏற்படும் பெரும் ஏமாற்றமே அவர்கள் நல்ல முறையில் வினாக்களை அணுகுவதற்குத் தடையாக அமைந்து விடுகின்றது. உதாரணமாக; ஓர் மாணவன் பகுதி (ii) இல் முதலாவது கட்டாய வினா ''பங்குடமை முடிவுக் கணக்கு'' அல்லது ''காசேடு தொடர்பான பகுதிகள்'' தான் வருமென தனக்குள் ஒரு எதிர்பார்ப்பை ஏற்படுத்திப் பரீட்சைக்குத் தயாராகச் செல்கின்றான். ஆனால் பகுதி(ii) இல் முதல் வினா ''தொழில் கொள்வனவு'' சம்பந்தமானதாக வருமேயானால் அவனது எதிர்பார்ப்பு தவறுவதால் அம்மாணவன் குழப்பமும் பதற்றமும் அடைவதுடன் அவ்வினா ஓர் இலகுவான வினவாக இருப்பினும் கூட அவ்வினாவுக்கும்; ஏன் ஏனைய வினாக்களுக்கும் கூட திறமையாக விடையளிக்கத் தவறுகின்றான். மாணவர்களுக்கு இத்தகையவோர் ''எதிர்பார்க்கை'' நிலையை உருவாக்குவதில் குறுகிய காலத்தில் அபிமானம் பெற்றுவிடத் துடிக்கும் சில ஆசிரியர்களினது பங்களிப்பும் உள்ளது என்பது மறுக்கப்பட முடியாதது. எனவே; மாணவர்கள் இவ்வாறான ஓர் எதிர்பார்க்கையை வளர்க்காது எப்பகுதியிலும்; எம்மாதிரியிலும் வினாக்கள் வரக் கூடுமெனவும்; ஆயினும் நான் திறமையாக அவ்வினாக்களை எதிர் கொள்வேன் எனும் மனத்துணிவை வளர்த்துக் கொள்ளுதல் அதிவிசேட சித்தியைப் பெறுவதற்கு மிக அடிப்படையானதாகும்.

அடுத்ததாக; மாணவர்களின் அநேகமானோர் பெருமளவு கவனயீனப் பிழைகளை விடுகின்றமை. அதிலும்; குறிப்பாகப் பெரிய வினாக்களில் கவனயீனமாகக் கணிப்பீட்டுத் தவறுகளை விடுவதனால் அவை தொடர்ச்சியாக பல தவறுகளை ஏற்படுத்திப் புள்ளிகளைக் குறைக்க வழி செய்வதுடன்; ஏனைய வினாக்களைத் தெளிவான மன நிலையில் தொடரும் நிலையையும் தடை செய்யும். இதனால்; மாணவர்கள் ஒவ்வோர் அலகையும் மீட்கும் போது கவனயீனப் பிழைகள் விடக் கூடிய இடங்களை (தாமே ஏற்கனவே பெற்ற அனுபவங்கள் மூலம்) குறித்துக் கொள்ளல் நல்லது. உதாரணமாக; பங்காளன் சேரலுடன் (இடைப்பட்டவோர் காலத்தில்) பங்குடமைக்கான காலப்பகுதி முடிவுக் கணக்கு சேட்கப்படும் பொழுது பின்வரும் விடயங்களை கவனமாக மனதில் பதித்து வைத்திருப்பதன் மூலம் கவனயீனப் பிழைகள் தவிர்க்கப்படலாம்.

(அ) நன்மதிப்பு பங்காளர் மூலதனக் கணக்குகளினூடாகச் சீராக்கம் செய்யப்படின் சேரும் திகதியில் புதியவன் கொணர்ந்த மூலதனம் உட்பட பழைய பங்காளரது மூலதனங்களும் மாற்றமடையும். ஆதலால்; மூலதன வட்டித் தொகையைக் கணிப்பிடும் போது சேரலுக்கு முந்திய காலப்பகுதிக்கு பரீட்சை மீதியில் தரப்பட்ட மூலதனத் தொகைகள் மீது பழைய பங்காளரது மூலதன வட்டிகள் கணக்கிடப்படும். சேரலுக்குப்பிற்பட்ட காலப்பகுதிக்கு அனைவருக்கும் சீராக்கிய மூலதனத் தொகைகள் மீது மூலதன வட்டி கணக்கிடப்பட வேண்டும் ஆனால், இவ்வாறான சந்தர்ப்பங்களில் அனேக மாணவர்கள் கணிப்பீட்டுப் பிழைகளை விடுகின்றனர்.

(ஆ) செம்மையாக்கலில் பங்காளரது பற்றுக்கள் மாதாந்த அல்லது காலாண்டு அல்லது வேறு ஏதேனும் கால அளவுகளில் சொல்லப்படுமாயின் ஒவ்வோர் பங்காளரும் அந்நிதியாண்டில் இருந்த காலப்பகுதிகளின் அடிப்படையில் பற்றுத் தொகைகளைக் கணிப்பிட வேண்டும்.

(இ) மொத்தலாபம் காலப் பகுதிகளுக்கிடையில் பங்கிடப்பட வேண்டியிருப்பின் அக்காலப்பகுதிகளுக்கான விற்பனை விகிதத்தைக் கணிக்கக் கூடியதாக உள்ளதா என்பதை அவதானித்து விற்பனை விகிதம் கணிக்கக் கூடியதாக இருப்பின் அவ்விகிதப் படியே பகிர்வு செய்ய வேண்டும். ஆனால், விற்பனை விகிதம் கணிப்பிடப்பட முடியாது என உறுதியாக முடிவு செய்யின் கால விகிதப்படி மொத்த இலாபம் பகிர்வு செய்யப்படலாம்.

(ஈ) அனுமதித்தகழிவீடுகள், விற்பனைக்கான இறை என்பன விற்பனை விகிதப்படி பங்கிடப்பட வேண்டும்.

இவ்வாறாகக் கவனயீனமாகப் பிழைகள் ஏற்படுமிடங்களை தவிர்த்துக் கொள்வதுடன் கூடிய கணித அறிவையும் வளர்த்துக் கொள்வது சிறப்பானது அண்மைக் காலங்களில் மாணவர்களினது கணிதம், மொழி தொடர்பான பாடத் தேர்ச்சிக் குறைவுகளும் (சாதாரண வகுப்பில்) பின்னர் உயர்தர வகுப்பின் இலக்குகளுக்கு குந்தகம் விளைவிக்கின்றன.

அடுத்ததாக, அண்மை ஆண்டுகளில் அனேக வினாக்களில் ஓர் உபபிரிவாகக் ''கோட்பாடு'' (Theory) சம்பந்தமான வினாக்கள் கேட்கப்படுவதோடு, இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் தொடர்பாக (SLAS) அதிக புள்ளிகளுக்குத் தனி வினாக்களும் கேட்கப்பட்டு வருவதால் இத்தகைய விடயங்களிலும் மாணவர்கள் தம்மைத் தயார் செய்து கொள்வது நன்மையாகும்.

இறுதியாக மாணவர்கள் வினாக்களுக்கு விடையளிக்கும்போது எல்லா வினாக்களையும் ஆராய்ந்து, முழுமையாகத் திருப்தியாக விடையளிக்கக் கூடிய வினாக்களுக்கே முதலில் விடையளித்து; ஏனைய வினாக்களுக்கும் சிந்தித்து விடையளிக்க போதியளவு நேரத்தையும் ஒதுக்கிக் கொள்வது அனுகூலமானதாகும். அத்துடன் விடையளிக்கும் போது பிரதான வினா இலக்கங்களையும் அவற்றின் உப பிரிவுகளின் இலக்கங்களையும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும் அத்தோடு விடைகளை நேர்த்தியாக ஒழுங்காக, கவர்ச்சிகரமாக வடிவமைத்துக் கொள்வதும் சிறந்த பெறுபேறுகளை உறுதிப்படுத்த உதவுவனவாக அமையும் வாழ்த்துக்கள்.

S. K. பிரபாகரன் B. B A, Spl)
உடுவில் மகளிர் கல்லூரி

# பொருளியல்- வர்த்தகம் A/L

### பொருளாதார ஒருங்கிணைப்புக்கள்

### ECONOMIC INTEGRATION

நாடுகள் தமக்கிடையே காணப்படும் வர்த்தகத் தடைகளையும், பேதப்படுத்தும் வரிகளையும் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நீக்கும் பொருட்டான வர்த்தகக் கொள்கைகளை ஏற்படுத்த பொருளாதார ரீதியில் ஒருங்கிணைகின்ற அமைப்பே பொருளாதார ஒருங்கிணைப்பாகும். இப் பொருளாதார ஒருங்கிணைப்புக்களானவை தெரிவு செய்யப்பட்ட வர்த்தக ஒழுங்குகளிலிருந்து கட்டில்லா வர்த்தகப் பிரதேசம் வரை வேறுபடுகின்றது. குறிப்பாக இவற்றைப் பின்வருமாறு ஒழுங்குபடுத்தலாம்:

1) தெரிவு செய்யப்பட்ட வர்த்தக ஒழுங்கு
2) சுங்கக் கூட்டுச்கள்.
3) பொதுச்சந்தைகள்
4) பொருளாதாரக் கூட்டுக்கள்
5) கட்டில்லா வர்த்தகப் பிரதேசம்

### 1) தெரிவு செய்யப்பட்ட வர்த்தக ஒழுங்கு PREFERENTIAL TRADE ARRANGEMENTS

இவ்வகையான பொருளாதார ஒருங்கிணைப்பைபொறுத்து அங்கத்துவ மில்லாத நாடுகளைக் காட்டிலும் குறைந்தளவு தடைகளையே அங்கத்துவ நாடுகளில் காணலாம் இது மிகவும் இறுக்கம் குறைந்த ஒரு அமைப்பாகும்.
உதாரணம்;- 1932 இல் தாபிக்கப்பட்ட பிரித்தானிய பொது நலவாய தெரிவு செய்யப்பட்ட திட்டம்.

### 2) சுங்கக் கூட்டுக்கள் CUSTOMS UNION

இவ்வகையான பொருளாதார ஒருங்கிணைப்பைப் பொறுத்து இவ்வமைப்புக்குள் இடம் பெறும் நாடுகளுக்கிடையிலான எல்லா வர்த்தகத் தடைகளும் நீக்கப் பட்டிருக்கும். இவ் வமைப்புக்குள் இடம் பெறாத நாடுகள் மீதும் ஒரு பொதுவான தீர்வை முறையினைக் கொண்டிருக்கும்.
உதாரணம்;- 1957 இல் உருவாக்கப்பட்ட ஐரோப்பிய பொருளாதார சமூகம்.

### வர்த்தக ஆக்கமும் வர்த்தகத் திருப்பமும் TRADE CREATION AND TRADE DIVERSION

நாடுகளால் அமைக்கப்படும் பொருளாதார ஒருங்கிணைப்பாகிய சுங்கக் கூட்டுகளால் ஏற்படும் விளைவுகளாக வர்த்தக ஆக்கம், வர்த்தகத் திருப்பம் என்பன அமைகின்றன:

வர்த்தக ஆக்கம் என்பது உயர்ந்த செலவுடைய உள்நாட்டு உற்பத்தியில் இருந்து குறைந்த செலவுடைய சுங்கக் கூட்டுக்குள் அமைகின்ற அங்கத்துவ நாட்டுக்கு மாற்றப் படுவதைக் குறிக்கின்றது. அதாவது சுங்கச் சமாசத்தின் அங்கத்துவ நாடொன்று தான் உற்பத்தி செய்யும் பொருள் ஒன்றை, இன்னொரு நாடு அதனை விடக் குறைந்த செலவில் உற்பத்தி செய்யுமாயின் முன்னைய நாடு தனது பொருளுக்காக பின்னைய நாட்டின் பொருளைப் பதிலீடு செய்யும்.

வர்த்தகத்திருப்பம் என்பது குறைந்த செலவுடைய சுங்கக் கூட்டுக்குள் அமையாத ஒரு நாட்டிலிருந்து உயர்ந்த செலவுடைய சுங்கக் கூட்டுக்குள் அமையும் அங்கத்துவநாடொன்றுக்கு மாற்றப் படுவதைக் குறிக்கும். அதாவது வெளியாரின் பொருள் மலிவாக இருந்த போதும் அங்கத்துவ நாடொன்று கூடிய செலவில் உற்பத்தி செய்யினும் வெளி

(4ஆம் பக்கம் பார்க்க)

மாணிக்கம் லோகசிங்கம் B.B.A. (Hons)
ஆசிரியர், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
வல்வெட்டித்துறை.

# தூயகணிதம் A/L

## பரீட்சைக்கான வழிகாட்டல் முறைகள்

சு. கிருஷ்ணகுமார் B. Sc. Dip. inEd.
உடுவில் மகளிர் கல்லூரி

**க.** பொ. த. உயர்தர கணித மாணவர்களுக்கு தூயகணித பாடப்பரீட்சையை எதிர்கொள்வதற்கு வேண்டிய வழிகாட்டல்கள் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளன. தற்போது இப்பாடத்தினை தயார் செய்திருக்கும் மாணவர்களுக்கு இவ்வழிகாட்டல்கள் சிறந்த பெறுபேறுகளை அவர்கள் பெறுவதற்கு உறுதுணையாக அமைய வேண்டும் என்பதே என் அவா ஆகும்.

முதல் விடயமாக அவர்கள் எழுதப்போகும் விடைகள் எங்ஙனம் அமைந்திருக்க வேண்டும் என்பது முக்கியமாகும் தூயகணித புள்ளியிடும் திட்டத்திற்கு அமைய அவர்கள் எழுதப்போகும் விடைகளுக்குரிய படிப்படியான செய்கைகள் அவர்கள் பெறுகின்ற புள்ளிகளைத் தீர்மானிக்கின்றது எனக்கூறினால் அது மிகையாகாது. எனவே மாணவர்கள் இதனைக் கருத்தில் கொண்டு தகுந்த படிப்படியான செய்கைகளுடன் விடைகளை விளக்கமாகவும் வேண்டிய நிறுவல்களுடன் உறுதியாகவும் எழுதவேண்டும்.

1989ம் ஆண்டு முதல் நாடு முழுவதும் நிலவும் அமைதியின்மையால் இப்பாடத்திட்டம் முழுமையாக முடிக்கப்படாத நிலையில்பகுதிI, பகுதிII ஆகியவற்றில்ஒவ்வொன்றில்12 வினாக்களில் 6 வினாக்களுக்கு மட்டுமே விடை அளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டு வருகின்றது. இதுமாணவர்களுக்குசாதகமான ஒருவிடயமாகும்ஏனைய விஞ்ஞான பாடப்பரீட்சைகளில் பல்தேர்வு வினாக்கள், அமைப்புக்கட்டுரை வினாக்கள், கட்டுரை வினாக்கள் அமைகின்றதால் முழுப்பாடத்திட்டமுமே பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாய நிலை உள்ளது. ஆனால் கணித பாடத்தைப் பொறுத்தவரை அவ்வகையான நிலைமை இல்லை இது கணிதம் கற்கும் மாணவர்களுக்கு பரீட்சை மட்டத்தில் வரவேற்கப்படக்கூடியதொன்றாகும். எனவே தாம் கற்கும் விடயங்கள் அனைத்தையும் தெளிவாகவும் விரிவாகவும் கற்க முயல வேண்டும். அடிப்படை எண்ணக்கருக்களும், கீழ் மட்ட எண்ணக்கருக்களும் தெளிவாக விளங்கிய நிலையில் உயர் மட்ட எண்ணக்கருக்கள் மிக இலகுவாகவும் விரைவாகவும் உருவாகும் நிலை ஏற்படும் என்பது கணிதவியலாளர்களின் அனுபவம் சார்ந்த வெளிப்பாடாகும், எனவே மாணவர்கள் தாம் கற்கும் ஒவ்வொரு அலகையும் அதன் பிரயோகங்களையும் விரிவாகவும் தெளிவாகவும் கற்கும்போது எவ்வகையான தரமுள்ள பரீட்சையையும் மிக இலகுவாக எதிர்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

அடுத்ததாக வினாத்தாள்கள் எவற்றை அடக்கியுள்ளன என்பது பற்றியும் மாணவர்கள் பெறுகின்ற புள்ளிகளை கணிதபாட அலகுகள் எவ்வாறு தீர்மானிக்கின்றன என்பது பற்றிய விளக்கங்களையும் சுருக்கமாக ஆராய்வோம்.

### வினாத்தாள்I

வினாத்தாள் I ஆனது தொடர்கள், தொடரிகள், எண்கொள்கை, சமனிலிகள், மீதித்தேற்றம், பகுதிப்பின்னங்கள், இருபடிச்சமன்பாடுகள், இருபடிக்கோவைகள், சிக்கல் எண்கள், ஆகன்வரிப்படம், வரிசை மாற்றங்களும் சேர்மானங்களும், ஈருறுப்புவிரிவு, எல்லைகள், வகையீடு, தொகையீடு, வளையி வரைதல், தொகையீட்டின் அண்ணளவாக்கம், மக்கிளோரின்விரிவு, பரப்பு கனவளவு போன்ற பகுதிகளை உள்ளடக்கியதாகப் பொதுவாக காணப்படுகின்றது.

மாணவர்களைப் பொறுத்தவரையில் வினாத்தாள் I இல் புள்ளிகளைப் பெறுவதில் பல வாய்ப்புக்கள் சாதகமானதாக உள்ளது. ஆரம்ப, அடிப்படை எண்ணக்கருக்களில் போதிய விளக்கம் இருப்பின்இயந்திரத் தன்மையாக செயற்பட்டே சிறந்த புள்ளிகளைப்பெற்று பல்கலைக்கழக அனுமதியைப் பெற சாத்தியக்கூறுகளுள்ளன

முதல் மூன்று வினாக்களும் தொடர்கள், தொடரிகள், எண்கொள்கை, சமனிலிகள், மீதித்தேற்றம், பகுதிப்பின்னங்கள், இருபடிச்சமன்பாடு, இருபடிக்கோவை போன்ற பாடப்பரப்புக்களை உள்ளடக்கியே தயாரிக்கப்படுகின்றன இவ் வினாக்களைக் கையாள்வதில் தேர்வு நாடிகளுக்கு எவ்வித சிரமமும் இருப்பதில்லை என்பதுகடந்தகாலபரீட்சைகர்களின்அறிக்கைகள்வாயிலாகத் தெரிகின்றது. அடிப்படை எண்ணக்கருக்களும் கீழ் மட்ட எண்ணக்கருக்களும் தெளிவாக விளங்கிய நிலையில் மாணவனொருவன் தன் திறமைக் கேற்ப அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுவிடுவான் என்பதில்சந்தேகமில்லை. இது அவன் வினாத்தாள் I இல் பெறுகின்ற புள்ளிகளில் 50% இனை பெற்றுக் கொடுக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

அட்சரகணிதப் பகுதியில் இடம் பெறுகின்ற ஏனைய 4 வினாக்களைப் பொறுத்தளவில் சிக்கல் எண் கொள்கையைத் தெளிவாகப்பகுத்துணர்ந்த மாணவன், கடந்தகால பரீட்சை வினாக்களின் அமைப்புக்களை ஆழ்ந்து ஆராய்வானாயின் இவ்வினாவுக்குரிய புள்ளிகளை இலகுவில் பெற்றுவிடுவான். ஈருறுப்பு விரிவைப் பொறுத்தவரையிலும் அதே செயற்பாடு இங்கு முற்றிலும் பொருந்தும். வினா ஒவ்வொன்றையும் உரிய முறையில் நயக்கும் தன்மை, விளங்கும் தன்மை போன்றவை பரீட்சை எழுதப்போகும் மாணவன்பால் காணப்படும்போது அதிகூடிய புள்ளிகளை இவ் வினாவிலும் மாணவன் பெறுவதற்கு இவ் அலகும் மாணவனுக்குப் பெரும் அனுகூலமாயுள்ளது. உதாரணமாக கடந்த 1993 ஆவணியில் இடம்பெற்ற பரீட்சையில் 7ம் வினாவில் முழுமையாக அட்சரகணித முறைகளைப் பயன்படுத்தி விடையளிக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டிருந்தும் கூட பெரும்பாலான மாணவர்கள் அதனைக் கவனியாது நுண்கணிதமுறையைப் பயன்படுத்தியது அவர்கள் முற்றாக வினாவை வாசிக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது. ஆகன் வரிப்பட அமைப்புக்களைக் கொண்ட வினாக்களில் அடிப்படைத் தேற்றங்களை நிறுவிய பின்னர் அதன் பிரயோகத்தினால் வினாவின் மிகுதிப்பகுதியை மிகக்குறுகிய நேரத்தில் விடை அளிக்கக் கூடிய நிலை காணப்படுகின்றது. கேத்திரகணித நுட்பங்களைப் பற்றித் தகுந்த அறிவைப் பெற்றிருக்கும் மாணவன் அதற்குரிய புள்ளிகளை இலகுவாகப் பெற வாய்ப்புள்ளது இதேபோல் வரிசை மாற்ற சேர்மான அலகில் இடம் பெறும் வினாவை முழுமையாக மனதில் கிரகித்து உள்வாங்கும் மாணவன் இப்பாட அறிவுடன் முழுமையான புள்ளிகளைப் பெற இடமுண்டு.

நுண்கணித பகுதியைப் பொறுத்தளவில் இதில் இடம் பெறும் வினாக்களுக்கு கூடியளவு மாணவர்கள் விடையளிப்பது புள்ளி விபரங்கள் மூலம் தெரிய வருகின்றது எல்லை, வகையீடு சம்பந்தமான வினாவிற்கே இவர்கள் மிகக் கூடிய அளவில் முக்கியத்துவம் கொடுத்துவருகின்றனர். எப்போதும் எல்லைப் பெறுமானங்களை முதற் கோட்பாடுகளில் இருந்து காண்பதே சிறந்தது. இதற்குப்பதிலாக பாடப்பரப்பிற்கு அப்பாற்சென்று தரவுகளுக்கு ஒவ்வாத சக்திவாய்ந்த தேற்றங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பது நல்லது. இத்தேற்றங்கள் தரவுகளை நிவர்த்தி செய்கின்றதா இல்லையா என்பதைக் கூட கருத்திற் கொள்ளாது பிரயோகிக்கின்றனர். வரைபுகளை வரையும்படி கேட்கப்படும் வினாவில் சமச்சீர் தன்மைபற்றியும் அணுகுகோடுகள் பற்றியும் விரிவாக ஆராய்ந்து [ஏனைய முடிவுகளுடன்] வரைபை வெளிக் கொணரும் போது அவ்விடயம் மாணவனுக்கு புள்ளிகளை முழுமையாகப் பெற்றுக் கொடுத்துவிடும். நுண்கணித பகுதியில் அமையும் இன்னோர் வினாவில் தொகையீட்டின் அண்ணளவாக்கம், மக்கிலோறின் விரிவு, எச்சுட்டிக்குமான விரிவுத் தேற்றம் என்ற மூன்று விடையங்களும் உள்ளடங்கியிருப்பதை 93 ஆவணி வரை நடை பெற்ற வினாத்தாள்களில் காணலாம். இப்பகுதிகளைக் கற்றுத்தேர்ந்த மாணவன் ஒருவன் தான் கற்றவற்றைப் பயன்படுத்தி படிமுறையான செய்கைகளில் விடையளிக்கும் போது பூரணமான புள்ளிகளைப் பெறுவதைக் காணக் கூடியதாகவுள்ளது. பரப்பு, கனவளவு காண்பதிலுள்ள வினாவுக்கும் மாணவர்கள் மிக இலகுவாகப் புள்ளிகளைப் பெற்று வருகிறார்கள்.

எனவே வினாத்தாள் ஒன்றைப் பொறுத்தவரையில் மாணவன் மிகக் கூடிய புள்ளிகளைப் பெறுவதற்கு எவ்வித சிரமத்தையும் இம்முறை எதிர்கொள்ள வேண்டி இருக்காது என்ற கருத்து உறுதியாகின்றது.

### வினாத்தாள்II

வினாத்தாள் II ஆனது தள, திண்ம, கேத்திர கணித பகுதிகளில் முதல் இருவினாக்களையும் ஆள்கூற்றுக் கேத்திர கணிதம் எனும் பகுதியில் அடுத்த 6 வினாக்களையும் திரிகோண கணிதத்தில் இரு வினாக்களையும் இறுதியில் நிகழ்தகவு, புள்ளி விபரவியல் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதான இரு வினாக்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

முதலாம் வினாவாக இடம் பெற்று வரும் தளகேத்திர கணிதத்தில் சேவா, மெனிலோஸ், சிம்சன்கோடு ஒன்பது புள்ளி வட்டம், திசாகசு, தொலமி போன்ற தேற்றங்களுடன் சில அடிப்படைத் தேற்றங்கள் பற்றியும் நன்கறிந்த மாணவன் சிறு அமைப்புக்களைக் கொண்டு மிகச் சுலபமாக விடையளித்து நேரத்தை மீதப்படுத்தி பரீட்சையில் வெற்றி வாகை சூடுவதை அனுபவ செயல்பாடுகளின் மூலம் காணக்கூடியதாகவுள்ளது. 1981ஆம் ஆண்டிலிருந்தே இத்தேற்றங்கள் திரும்பத் திரும்ப சிறு பிரயோகங்களுடன் வந்து கொண்டிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. 1993 ஆவணி பரீட்சையில் கூட தொலமியின் தேற்றம் சிறு பிரயோகத்துடன் முதலாம் வினாவாக இடம் பெற்றபோது மாணவர்கள் பெற்ற மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. இம்முறை மாணவர்கள் இப்பகுதியில் காட்டிய அளவு கடந்த உள்ளார்ந்த செயற்பாடு அவர்களுக்கு கைகொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இரண்டாம் வினாவாக இடம்பெற்று வரும் திண்மக் கேத்திர கணிதப் பகுதியை ஆர்வத்துடன் பயிலும் மாணவர்கள் சுலபமாக விடையளித்து நேரத்தை மீதப்படுத்தி கூடிய புள்ளிகளைப் பெறுவதை அனுபவத்தின் மூலம் காண முடிகிறது. 1981ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை நடைபெற்ற பரீட்சைகளில் 1982, 89ஆம் ஆண்டுப் பரீட்சை வினாத்தாள்களில் மட்டுமே 'p, q எனும் இரு இடைவெட்டும் கோடுகளின் இடைவெட்டும்புள்ளியில் ஒருகோடு l, அக்கோடுகளுக்குச் செங்குத்தாக இருப்பின் pஐயும் qஐயும் கொண்டுள்ள தளத்திற்கு l செங்குத்தாகும் என நிறுவுக' எனும்தேற்றம் கேட்கப்பட்டுள்ளது. ஏனைய வருடங்களில் நான்முகி சதுரமுகி, செவ்வகமுகி, இணைகரப்பரவை போன்ற திண்ம உருவங்களிலேயே வினாக்கள் இயற்றப்பட்டுள்ளன. இவற்றிலும் உள்ளார்ந்த ஈடுபாட்

( 4 ஆம் பக்கம் பார்க்க)

# தூயகணிதம்

டைக் கொண்டிருக்கும் மாண வர்கள் குறுகிய நேரத்தில் சில வெளிப்படை உண்மை களை மட்டும் பயன்படுத்தி சாதுரியமாக விடையளித்து கூடிய புள்ளிகளைப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது,

ஏனைய 6 வினாக்களும் ஆள் கூற்றுக் கேத்திரகணிதத் தில் இடம்பெறுகிறது. இந்த 6 வினாக்களுக்கு மட்டும் விடையளிப்பதன் மூலமே வினாத்தாள் IIஇல் 100 புள் ளிகளைப் பெறுவதற்கு வாய் ப்பளிக்கப்பட்டுள்ளது. இந்த 6பகுதிசளும் சில சிறப்பான உடைமைகளை உள்ளடக்கிய தும் பொதுவான உடைமைக ளைக் கொண்டதுமான 'கூம்பு' என்ற பகுதியைச் சார்ந்தனவாகையால் இவ்வு டைமைகளை நன்கு அறிந்திருப்பதன் மூலம் இவ் வினாக்கள் சுலபமாகக் கையாளப்படலாம்.

இவ்வினாத்தாளின் அடு த்து வரும் இரு வினாக்களும் திரிகோண கணிதத்திலும் இறுதி இரு வினாக்களும் நிக ழ்தகவு, புள்ளி விபரவியல் என்னும் பகுதிகளிலும் உள்ள டங்கியிருப்பதால் சுலபமாக விடையளிக்கக் கூடியதாகவுள் ளது.

இவ்வாறாக வினாத் தாள் II ஐப் பொறுத்தவரை யில் மாணவர்கள் மிகச் சுலப மாக புள்ளிகளைப் பெறும் வண்ணமே இம்முறை தூய கணிதப் பாடப் பரீட்சை அமையும் என்பது பொது வான கருத்தாகவுள்ளது.

அடுத்ததாக பரீட்சை எழு தப் போகும் தேர்வு நாடிகளு க்கான வழிகாட்டல் முறைக ளைக் கவனிப்போம்.

தேர்வு நாடிகட்கு அறிவுரைகள்

1. தேர்வுநாடிகள் விடை கள் எழுதுவதற்கு முன்பாக வினாத்தாளிலுள்ள முழு வினாக்களையும் முழு மையாக வாசிக்க நேரம் ஒது க்க வேண்டும். இதற்கு நேரம் செலவழிகிறதே என நினைக் கக் கூடாது. பின்னர், தான் தெரிவு செய்த முதன்மை யான ஆறு வினாக்களுக்கு வரிசைக்கிரமமாக விடை அளிக்க வேண்டும்.

2. ஒவ்வொரு வினாவுக் கும் மிகக் கூடிய அளவு 25 நிமிடங்களை ஒதுக்குவது என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும். அத்துடன் ஒவ்வொரு வினா வுக்கான விடையையும் ஒரு புதிய விடைத்தாளிலேயே ஆரம்பிக்க வேண்டும். ஏனெ னில் சிலவேளைகளில் 6 வினா க்களுக்கு மேல் விடையளிக் கும் பட்சத்தில், திருப்திகர மாக அளிக்கப்பட்ட விடை களை, முதல் 6 தெரிவுக்குள் வரக்கூடியதாக விடைத்தாள் களை ஒழுங்குபடுத்த இச் செயற்பாடு உதவியளிக்கும்.

3. விடை எழுதுவதற்கு முன்பாக ஒவ்வொரு வினாவையும் கவனமாக வாசிப்பது மிக அவசியமா கும். சில தேர்வு நாடிகள் பொறுமை இல்லாது, வினாக் களை முற்றாக வாசிக்க முன் னரே விடைகளை எழுதத் தொடங்குவதால் அனாவசிய மாகப் புள்ளிகளை இழக்க நேரிடுகின்றதெனப் பரீட்ச கர்கள் தமது அறிக்கையில் சுட்டிக் காட்டுவதை காணக் கூடியதாக உள்ளது,

4. தேர்வு நாடி ஒருவர் தான் தெரிவு செய்த வினா வொன்றுக்கு விடையளிப்பத ற்கு முன்பாக அதனை மீண் டும் ஒரு தடவையோ, இரு தடவையோ முழுமையாக வாசித்து குறித்த நேரத்தி னுள் அதற்குரிய திருப்திகர மான விடையை அளிக்க முடி யுமா எனப் பார்க்க வேண் டும். சில சமயங்களில் தேற்ற த்தைக் கூறுமாறு கேட்கப் பட்ட வினாவுக்கு சில தேர்வு நாடிகள் நிறுவலையும் சேர் த்து எழுதி உள்ளனர். இதில் நிறுவலுக்குப் புள்ளிகள் வழங் கப்படுவதில்லை என்ற பாதி ப்போடு ஒதுக்கப்பட்ட உரிய நேரமும் விழலுக்கு இறைத்த நீராகி விடுவதைக் காண லாம்.

5. ஒவ்வொரு வினாவுக் கும் விடை எழுதுவத ற்கு முன்னர் சுருக்கமான முறைகள் உள்ளனவா எனப் பார்ப்பதோடு மட்டுமல்லாது விடைகளை விளக்கமாகவும், வேண்டிய நிறுவல்களுடனும் உறுதியாக எழுத வேண்டும்.

6. விடைகளை அளிப்ப தில் நியமமான முறை களில் மட்டும் தங்கி இராது இலகுவான வழிமுறைகளைக் கையாண்டு நேரத்தை மீதப்ப டுத்தி நுட்பமாகச் செய்து சரியான விடையை அளிப்பத ற்கு முயற்சிக்க வேண்டும்.

7. மாறுதலேயின்றிய ஒரே மாதிரியான கண க்குகளை பரீட்சையில் எதிர் பார்க்கக் கூடாது. கற்கும் போது ஒவ்வோர் அலகிலும் உள்ள வெளிப்படையுண்மை களை தெளிவாக விளங்கிக் கொள்ளவேண்டும். ஏனெனில் ஒரு அல கில் கற்கும் விடயம் ஏனைய அலகுகளில் வெவ் வேறு வடிவம் பெற்று வருவ தால், அவ்வலகுகளுக்கு இது அடிப்படையாக அமைவ தோடு அல்லாமல் இதன் இவ்வொரு அலகிமுலு ள்ள பிரயோகமும் அளவுக்கு அதிகமாக உள்ளது. உதார ணமாக சமனிலிகளைப் பற் றிய பிரயோகமானது சிக்கல் எண்கள், கேத்திர கணிதம், தொடர், எண்கொள்கை, நிகழ்தகவு போன்றவற்றில் சர்வசாதாரணமாகக் காணப் படுகின்றது. இதேபோல் கணிதத் தொகுத்தறிவு பற் றிய பிரயோகம் எண்கொள் கை, தொடர், சமனிலி, ஈருறுப் புவிரிவு, சிக்கல் எண் வகையீடு, தொகையீடு போ ன்றவற்றிலும் இடம்பெறுவ தை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

8. சிக்கல் எண்களில் போ துமான அளவு பின்ன ணி அறிவு தேர்வு நாடிக ளின் விடையாக்கத்திற்கு தே வை என்பதால் அவை பற் றிய விரிவான அடித்தளம் ஒன்றை அமைத்துக் கொண் டே பரீட்சையில் அவ்வினா வை எதிர்கொள்ள வேண்டும்

9. வரிசைமாற்றம் சேர் மானம் என்ற அலகில் இடம்பெறும் வினாவை முத லில் நன்கு வாசித்து தேர்வு நாடிகள் தம் மனதில் முழு வதையும் கிரகித்துக்கொள் ளவேண்டும் பின்னர் சிறு பகு திகளாக அதனைப் பிரித்து வரிசைமாற்றம் சேர்மானத் துக்கான கொள்கையை பா வித்து தீர்வு காண முயல வேண்டும் வீணான சந்தேக ங்களுக்கும் பய உணர்ச்சிக ளுக்கும் இடம் கொடுக்காமல் செய்யும் போது விடை இயல் பாகவே பெறப்படும்.

10. தூய கணிதப்பாடத் திட்டத்தைப் பொறுத் தவரையில் அறிவு துண்டா டப்பட்ட வண்ணமேயுள்ளது. தள, திண்ம கேத்திர கணித வினாக்களுக்கு சிறு அமைப்பு க்களை இடுவதன் மூலம் மிகக் குறைவான நேரத்தில் விடை அளிக்கக் கூடியதாக உள்ள தால் அவற்றைத் தேர்வுநாடி தெரிவு செய்யும் போது புள் ளிகள் இலகுவாகப் பெறப்ப டுவதோடு மட்டுமல்லாது நேரத்தை மீதப்படுத்தக் கூடிய வாய்ப்பும் அமைந்து விடுகின்றது.

11. ஆள் கூற்று கேத்திர கணிதத்தில் வரைபுக ளுக்குரிய நியமமான சமன் பாடுகளை மட்டும் மாணவர் கள் அறிந்து வைத்திருக்காது எச்சந்தர்ப்பத்திலும் குவியம், செலுத்தலியைக் காணத்த க்க வகையில் அறிவு பெற்றி ருக்க வேண்டும். வளையியி கள் ஒவ்வொன்றுக்குமான இயல்புகளை அறிந்து வைத் திருப்பது, வினாக்களை இனம் காண்பதற்கு உதவி அளிப்பதோடு, விடை அளிப் பதற்கான இலகுவான வழி யையும் புலப்படுத்தி விடும்.

12. முனைவாள் கூறுகள் வளையி வரைதல், பிரதேசம் நிழற்றல் போன்ற அலகுகளில் இடம்பெறுகின்ற வினாக்களுக்கு தாம் கற்றவ ற்றை நேரடியாகப் பாவித்து விடையளிக்கக் கூடியதாக உள்ளதை கடந்த காலப் பரீ ட்சை வினாக்களின் அமைப் புக்களைக் கொண்டு மாண வர்கள் அனுபவம் பெற்றிருப் பார்கள். இவ் அனுபவத்தி னூடு இத்தகைய வினாவுக்கு விடை அளிப்பது திடமாகி விடும்.

13) மாணவர்கள் தமக்கு கிடைத்ததகவல்களைக்கணித எண்ணக் கருக்களினூடாகப் பகுத்தாயும் அளவுக்கு அறி வும் திறனும் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறே தமது அவதானிப்புக்களைத் தெளி வாகப் பதிவு செய்து கொள் வதற்கும், தமது கருத்துக் களை மற்றவர்க்கு விளங் கும் விதத்தில் வெளிப்படுத்து வதற்கும் அவசியமான திற னைப் பெற்றிருக்க வேண்டும் இத்தகைய செயற்பாடுகள் ஒரு மாணவன் உயர்கல் வியைப் பெறும்போது ஏனைய பாடங்களிலுள்ள சிக்கல்தன் மையை அகற்ற அடிகோலு வதால் கணித பாடத்தில் சித்தி எய்தியாக வேண்டும் என்ற உறுதிப்பாடு மாணவர் மனதில் முழுமையாக இடம் பெறவேண்டும்.

14) பரீட்சை நடைபெறும் காலத்திலேயே முடிவடைந்த பரீட்சையினைப் பற்றி உடன டியாக ஏனைய மாணவர்களு டன் கலந்துரையாடுவது தவிர்க்கப்பட வேண்டும். இது உளரீதியான பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்பாகலாம்.

# பொருளியல்

யாரின் பொருளுக்காக அங்க த்துவ நாட்டின் பொருளை யே கொள்வனவு செய்யும்

3. பொதுச் சந்தைகள்
**COMMON MARKETS**

இத்தகைய பொருளாதார ஒருங்கிணைப்பானது சுங்கக் கூட்டுக்கு அப்பாலும் செல்வ தாக இருக்கும். எனவே இத் தகைய பொருளாதார ஒரு ங்கிணைப்புக்குள் அமையும் நாடுகளுக்கிடையே எல்லா வர்த்தகத் தடைகளும் நீக்கப் படுவதுடன் உழைப்பு மூலத னம் போன்றனவும் எதுவித தடையுமின்றி அசையும். இவ் அமைப்புக்குள் இடம்பெறாத நாடுகள் மீதும் ஒரு பொது வான தீர்வையினைக் கொண் டிருக்கும்.

உதாரணம் - 1970 இல் ஐரோப்பிய பொருளாதார சமூகம் பொதுச்சந்தை என்ற நிலையை அடைந்தது.

ஐரோப்பிய பொருளா தார சமூகம்
**EUROPEAN ECONOMIC COMMUNITY**

மேற்கு ஐரோப்பிய நாடு கள் தமக்கிடையேயான பொருளாதார நடவடிக் கையை ஊக்குவிக்கும் நோக் குடன் பொருட்கள் சேவை கள் மூலதனம் மக்கள் எல் லைகளுக்கிடையில் எதுவித தடங்கலுமின்றி அசைவுற வேண்டும் என்ற குறிக்கோ ளுடன் இயங்குகின்றது. 1957 இல் இது உருவாக்கப்பட்டது. இதில் பெல்ஜியம், பிரான்ஸ், இத்தாலி, லக்ஷம்பேர்க், நெதர்லாந்து, டென்மார்க், அயர்லாந், பிரித்தானியா. கிரேக்கம், போர்த்துக்கல், ஸ்பெயின் எனும் 12 நாடுகள் அங்கத்துவம் பெறுகின்றது.

4. பொருளாதாரக் கூட்டுக்கள்
**ECONOMIC UNION**

இத்தகைய பொருளாதார ஒருங்கிணைப்புக்குள் அமை யும் நாடுகளுக்கிடையே எல்லா வர்த்தகத் தடைகளும் நீக்கப்படுவதுடன், உழைப்பு, மூலதனம் போன்றனவும் எது வித தடையுமின்றி அசைவ துடன் நாணய நிதிக் கொள் கைகளிலும் ஒருமித்த தன் மையைக் காணலாம். இத்த கையஅமைப்பு மிகவும் ஒரு முதிர்ச்சியடைந்த நிலையா கும். இவ்வமைப்புக்குள் இடம் பெறாத நாடுகள் மீதும் ஒரு பொதுவான தீர்வையினைக் கொண்டிருக்கும்.

உதாரணம் - 1958 இல் அமைக்கப்பட்ட **BENELUX**

5. கட்டில்லா வர்த்தக பிரதேசம்
**FREE TRADE AREA**

இவ்வகையான பொருளா தார ஒருங்கிணைப்புக்குள் அமையும் நாடுகளுக்கிடையே யான வர்த்தகத்தில் உள்ள எல்லாத் தடைகளும் நீக்கப் கப்பட்டிருக்கும். இவ்வமைப் புக்குள் இடம் பெறும் நாடு கள் வெளியாருடன்தொடர்பு கொள்ளும் பொழுது தமது எண்ணப்படி தடைகளை விதி க்கலாம்.

உதாரணம் - 1960 இல் அமைக்கப்பட்ட ஐரோப்பிய கட்டில்லா வர்த்தகக் கழகம். (E. F. T. A)

● 1994 ஆவணி மாதம் நடைபெற உள்ள பரீட்சை நோக்கிற்கு!

வினா 1. நேர்க்கணிய அமயச் செலவையும், பூச்சிய அமயச் செலவையும் வேறுபடுத்துக?

நேர்க்கணிய அமயசெலவு என்பது சாதாரண அமயச் செலவு ஆகும். இங்கு இழப் புக்குப் பெறுமதி இருப்ப தால் நேர்க்கணியமாகும். பூச்சிய அமயச் செலவு என் பது இழப்பு இல்லாத பொருளாதார நடவடிக் கையாகும். இங்கு இழப்பு க்குப் பெறுமதி இல்லாமை யால் பூச்சிய அமயச்செல வாகும்.

வினா 2: அமயச் செலவுகள் அதிகரிப்பதற்கான காரணம் யாது?

காரணி வளங்கள் ஒரே தன்மையைக் கொண்டிருப் பதில்லை. குறிப்பாக இவைபூரண மாற்றப் பயன் பாட்டினைக் கொண்டிருக் காததால் அவற்றின் எல்லை விளைவு திறன் குறைவடைகின்றது. இத னால் அமயச் செலவு நடைமுறையில் அதிகரிகின் றது.

# தமிழர் நம்பிக்கை இழக்க அபிவிருத்தி பின்னடைவே காரணம்

-பண்டித சுமங்கலிக தேரோ

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் தமிழ் மக் கள் தமக்கு சமூக பொருளா தார அபிவிருத்தியில் ஏற்ப ட்ட பின்னடைவுகளின் கார ணமாகவே அவர்கள் தமக்கு என்ற ஓர் தனி அரசை நிறுவு வதற்கு முன்வந்தனர் என சர்வமத கூட்டத்தில்பௌத்த பீடத்தை பிரதிநிதித்துவம் நுகேகொட சந்தியில் நடைபெற்ற சர்வமத தலைவ ர்களின் பொதுக் கூட்டத்தில் அவர் இக்கருத்தை தெரிவித் துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், அபிவிருத்தி என்பது தனியே பொருளாதா ரத்துடன் மட்டும் நின்று விட முடியாது என்றும் அது சமூ கத்துடனும் இணைந்து டும் என்றும் அவ் எதிர்பார்ப் புகள் முறியடிக்கப்பட்ட நிலையில் நாட்டின் இப்படி யான பிரச்சினை எதிர் நோக் குவது தவிர்க்கமுடியாதது என வும் வடக்கு-கிழக்கு மக்களின் பொருளாதார சீர் குலைவு தான் இன்று அவர்கள் பிரி ந்து செல்வதற்கும், சிறிலங் காவின் அரசாங்கங்களின் மீது

# பாதுகாப்புகோரப்படின் நடவடிக்கை எடுக்கப்படும்
## தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

அச்சுறுத்தல் அதிகமாக வுள்ள பொதுத் தேர்தல் வேட்பாளர்கள், தங்கள் தங் கள் கட்சிகளின் பொதுச் செயலாளரினூடாக பாது காப்புத் தேவையென தெரி விப்பின், அவர்களுக்கு பாது காப்பு வழங்கப்படும் என தேர்தல் ஆணையாளர் அறி வித்துள்ளார். நேற்றைய தினம் கட்சி வேட்பாளருடன் நடாத்திய சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்

மேலும், ஐதேகவின் சுவ ரொட்டிகளும், தேர்தல் சட்ட முறையின் கீழ், பாகுபாடு காட்டப்படாமல் அகற்றப்படு மெனவும் அவர் தெரிவித்துள் ளார்

# எதிரணி வேட்பாளர் மீது

# வீட்டுக்கிருத்திய

பீடத்தை பிரதிநிதித்துவம் செய்த கதுறுவெல ரஜமகா விகாரையைச்சேர்ந்த விகாராதிபதி பண்டித சுமங்கலிக தேரோ தெரிவித்துள்ளார்.

கத்துடனும் இணைந்து செல்ல வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இவைகளின் எதிர் பார்ப்புகள் நிறைவேற்றபட வேண்

காவின் அரசாங்கங்களின் மீது நம்பிக்கை ஏற்படாதமைக்கும் காரணம் என தெரிவித்தார்.

## பாராட்டு விழா

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றத்தின் ஆதரவில் அருள் மிகு ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலய அலங்கார உற்சவ காலங்களில் இராமாயணத் தொடர் சொற்பொழிவு ஆற்றிய பிரம்ம ஸ்ரீ பா. வசந்தசர்மா அவர்களுக்கு பாராட்டு விழா 25.7.94 இன்று மாலை 6 மணிக்கு மன்றத் தலைவர் திரு. பொ. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெறும்.

யாழ் வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியர் திரு. செ. நடேசகாந்தன், இளைப்பாறிய அதிபர் திரு.கா. கணேசதாசன் ஆகியோர் பாராட்டுரை நிகழ்த்துவார்கள். (24)

## போட்டி ஆரம்பமாகவில்லை

(மாத்தறை)

இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் அணியினருக்கும், கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபை அணிக்கும் இடையிலான 3 நாள் கிரிக்கட் போட்டி நேற்று முன்தினம் திட்டமிட்டபடி ஆரம்பமாகவில்லை.

## காம்பியா அரசு படையினர் வசம்

காம்பியா நாட்டின் அரசை இராணுவம் கைப்பற்றியுள்ளது. அந்நாட்டில் சகல அரசாங்க நடவடிக்கைகளும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. விமானத்தளங்கள் மூடப்பட்டுள்ளன.

இதுவரைஆட்சிப் பொறுப்பிலிருந்தவர்கள் காவல்நிலையங்களில் சரணடையுமாறும் இராணுவம் கேட்டுள்ளது.

## எதிரணி வேட்பாளர் மீது கல்வீச்சு தாக்குதல்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிக் கொண்டிருந்த அக்கட்சியின் வேட்பாளர் கற்களால் தாக்கப்பட்டுள்ளார். ஐக்கிய தேசியக்கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவரின் தலைமையிலேயே இத்தாக்குதல் இடம் பெற்றதாகவும் பொதுஜன ஐக்கிய முன்னணியினர் குற்றம் சாட்டியுள்ளனர்,

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளருமாகிய சுபோனி ஜெயசீலி மீது கற்கள் வீசப்பட்டது எனவும் இக்கூட்டத்தை ஒழுங்கு செய்த அமைப்பாளர் வீடு முற்றாக தாக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## சிறுவர் போசாக்கு நிலைய ஆண்டு நிறைவு விழா

நாவற்குழி லவனிதா குடியிருப்பில் இயங்கும் சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்காவின் முதலாம் ஆண்டு நிறைவு விழா 20ஆம் திகதி புதன் கிழமை இரவு நடைபெற்றது லவனிதா குடியிருப்புப் பொறுப்பாளர் திரு. தேவன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அரசியற் துறை நடுவப்பணியகப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா, யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு இளம்பரிதி, மகளிர் அமைப்பின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் செல்வி. தணிகைச்செல்வி, பூங்கா நிர்வாகி திரு. மு. நடேசரெத்தினம், தீவகக் கோட்ட கூட்டுறவு ஒன்றியத் தலைவர் திரு. ப. கனகலிங்கம் ஆகியோர் சிறப்புரைகள் ஆற்றினார்கள். பூங்கா சிறார்களின் கலை நிகழ்ச்சிகளும்இடம் பெற்றன. (22)

## எதிரணியின்பாதயாத்திரை இடையில் தடுத்து நிறுத்தம்

(கொழும்பு)

இரத்தினபுரி மாவட்டத்தில் பாதையாத்திரை மூலம் தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்ட பொது ஜன ஐக்கிய முன்னணியினர் பொலிசாரால் தடுத்து நிறுத்தப்பட்டனர். இதனையடுத்து இவ் யாத்திரை இடையில் கைவிடப்பட்டது.

இப் பாதயாத்திரையில் சென்றுகொண்டிருந்த 3500 க்கு மேற்பட்ட பொது ஜன ஐக்கிய முன்னணித் தொண்டர்கள் கலந்துகொண்டதாகவும் இதனைப் பொலிசார் தடுத்துவிட்டனர் எனவும் அக்கட்சியின் வேட்பாளர் ஆர். ஏ. ஜெயதிஸ்ஸ கூறியுள்ளார்.

ஆனால் அம்மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்கள் தாம் நினைத்தபடி நடந்து கொள்ள பொலிசார் உதவி வருவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

---

## 3 ஆம் ஆண்டு நினைவாக



மலர்வு: 23 — 7 — 1976

வீரச்சாவு: 25 — 7 — 1991

### வீரவேங்கை கிறிஸ்ரி
### (வேலுப்பிள்ளை வேதநாயகம்)

தூரத்தில் தெரியும் வெளிச்சம்
துல்லியமாய் நெருங்கும் ஒரு நாள்
நேரிலே உன்னைப் பார்க்கும் இன்பம்
விடுதலையாய் நெருங்கும் நிச்சயம்.

இவருடன் வீரச்சாவடைந்த போராளிகளையும் நினைவு கூருகின்றோம்.

சுழிபுரம் மேற்கு. (8865) - குடும்பத்தினர்

---

## அந்தியேட்டி அழைப்பு



### அமரர்
### வேலுப்பிள்ளை பாலவிநாயகம்

(பாராளுமன்ற முன்னாள் பிரதம லிகிதர்)

(Retired Principal Clerk of House of Representatives)

மலர்வு: 15-09-1907 உதிர்வு: 25-06-1994

அன்பின் சோதியே பாசத்தின் பிறப்பிடமே
உங்கள் ஆசைமுகம் மறைந்து முப்பத்தொருநாள்
போனாலும் இன்பமாய் நாம் வாழ்ந்த காலத்தை
நினைத்து மறக்க முடியாமல் தவிக்கின்றோம்.

அன்னாரின் மரணச் சடங்கில் கலந்துகொண்ட உறவினர், நண்பர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (25-07-94) அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எரிஞ்சம்பன் கோயிலடியில் நடைபெறும் அந்தியேட்டியிலும் வீட்டுக்கிருத்திய, ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

நாகலிங்க முதலி ஒழுங்கை, பருத்தித்துறை.

மகள்: திருமதி சத்தியதேவி மகேந்திரன்

பேரப்பிள்ளைகள்: திரு. வைரமுத்து இளங்கோவன் (வர்த்தகா பருத்தித்துறை)
திருமதி சாந்தினி இளங்கோவன் (ஆசிரியை சித்திவிநாயகர் வித்தியாலயம் பருத்தித்துறை)
திரு. மகேந்திரன் சிவகணேசன் (ஜேர்மனி)
திரு. மகேந்திரன் சத்தியபாலன் (ஜேர்மனி)

பூட்டப்பிள்ளைகள்: விபூஷன், ஹரீஷன், துஷீதன்.

(8917)

Nallur Branch Library

## சிந்தனைக்கு..

அச்சம், அன்பை விடப் பலமானது.

- தாமஸ் ஃபுல்லர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 25-07-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## அரைக்கிணறு தாண்டிய நிலையே

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையில் செயற்படும் பொது ஜன ஐக்கிய முன்னணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்திலும், அரசியல் பிரசாரத்தின் போதும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது பற்றி வலியுறுத்திப் பேசி வருகின்றது. ''இனப்பிரச்சினைக்குரியதீர்வு விடயத்தில் நாம் உண்மையாகவுள்ளோம்'' எனவும் கூறி வருகின்றது.

இதற்கு ஏற்றால் போல், 'அவசரமானதும் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததுமான பிரச்சினை இனப்பிரச்சினையே என நாம் நம்புகின்றோம். இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் பொருளாதார சமூக அபிவிருத்தி சாத்தியமில்லை' என பொது ஜன ஐக்கிய முன்னணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளது. அத்தோடு 'இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக உண்மையான அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்த நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்' எனவும் குறிப்பிட்டுள்ளது.

பொது ஜன ஐக்கிய முன்னணி இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில், இவ்வாறு அக்கறை காட்டுவது வரவேற்கத்தக்கது தான். இவ்வாறான ஒரு நிலைப்பாடு இனப்பிரச்சினைக்குத் தீர்வு விடயத்தில் அவசியமானது தான். இருப்பினும் இது குறித்து முக்கியமான கேள்விகளும், சந்தேகங்களும் சில உள்ளன.

இதில் முக்கியமானது பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிலைப்பாடானது உளப்பூர்வமாகவே பிரச்சினைத் தீர்வு விடயத்தில் கொண்டுள்ள அக்கறையா? அல்லது சிறுபான்மையினர் வாக்குக்களைக் குறி வைத்துச் செய்யப்படும் தேர்தல் பிரசாரமா? என்பதாகும்.

உண்மையாகவே இனப்பிரச்சினைத் தீர்விற்கு அதிகாரப் பரவலாக்கல் செய்வதில் நம்பிக்கை கொண்டுள்ளதாக பொது ஜன ஐக்கிய முன்னணி ஏற்கனவே உறுதி கூறியிருப்பினும், இவ்வாறானதொரு கேள்வி கடந்த கால வரலாற்றின் அடிப்படையில் அவசியமானதொன்றே ஆகும். ஏனெனில் சிங்கள அரசியல் தலைவர்கள் ஏற்க

# இராணுவத்தின் போர்த்திட்டத்திற்கு பேரிடியாய் அமைந்த இதய பூமி 1

### மண்கிண்டிமலை

மணலாறு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் கிராமத்திலிருந்து முந்திரிகைக்குளம் நோக்கி செல்லும் வீதியின் மையத்தில் அமைந்துள்ள ஒருமலை.

தமிழர் தாயகத்தின் புவியியல் தொடர்ச்சியைத் துண்டிக்க சிறிலங்கா இராணுவம் அமைத்த இராணுவ வேலிகளின் மையம்.

இராணுவ முகாமைச் சூழவும் ஆயுதபாணிகளான சிங்களவர்களின் குடியேற்றமும், சிங்களவர்களின் குடியிருப்புகளுக்கு பாதுகாப்பிற்கென முந்திரிகைக்குளம், சாம்பான்குளம், கோட்டாக்கேணி, கொக்குத்தொடுவாய் என வரிசையாக அமைந்திருந்த தமிழர் கிராமங்களில் எல்லாம் இராணுவ முகாம்கள். இந்த இராணுவ முகாம்களுக்கு தலைமைப் பாத்திரமேற்றவர்களின் கூடாரம் அமைந்திருந்த இடம்.

மண்கிண்டிமலை, இப்போது ஒரு கிராமத்தின் பெயர் மட்டுமல்ல, அது இதயபூமி 1 இராணுவ நடவடிக்கையின் வெற்றியின் குறியீடு, அரசியல் -இராணுவ ரீதியில் புலிகள் இயக்கம் ஈட்டிய சாதனை ஒன்றின் சின்னம். புலிகள் இயக்கம் பெற்றுவரும்-களத்தில் காட்டிவரும் ஆற்றலின் வெளிப்பாடு. கொழும்பிலிருந்துஆட்சி நடத்தும் ஆட்சியாளர்களுக்கு அதிர்ச்சியூட்டும் பெயர்- சிங்கள ஆட்சியாளர்களின் நோக்கத்தின் மீது-அந்த நோக்கத்தை எட்ட அவர்கள் வகுத்திருந்த போர்முறைத் திட்டத்தின் மீது - அப்போர்த்திட்டத்தின் மூலம் பெற்றுவரும்' வெற்றி' பற்றிய நம்பிக்கையின் மீது விழுந்த முதலாவது பலமான அடி.

இதயபூமி 1 எனப் பெயர்சூட்டி விடுதலைப் புலிகள் எடுத்த போர் நடவடிக்கையின் தளம். ஆம்! இத்தனையின் சுருக்கம் தான் இப்போது மண்கிண்டிமலை என்று அர்த்தப்படுத்தப்படுகிறது.

மண்கிண்டி மலை அமைந்துள்ள மணலாறு பூமிக்கு தனிச் சிறப்புக்கள் பலவுண்டு. தமிழர் தாயகத்தின் வடக்கும் தெற்கும் சந்திக்கும் மையப் புள்ளி. இந்திய வல்லாதிக்கப் பசிக்கு விடுதலைப் போர் இரையாகிப் போய் விடாமல் காத்த பூமி. கடல் வளமும், நிலவளமும், வனவளமும் செழிக்கும் பூமி. களம், தளம், வளம் எனப் பலவும் நிறைந்த தமிழர்களின் இதய பூமி.

### இதயபூமி - 1

இந்த இதயத்தில் கால் பதிக்க முனைந்த எதிரிகளுக்கு தகுந்த பாடம் புகட்ட மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைதான் இதய பூமி 1.

அதுவும் கறுப்பு ஜூலை எனப்படும் 83-ன் ஜூலையில் நிகழ்ந்த சம்பவங்களை நினைவு கூரும் வகையில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தக் கூடும் என்று பாதுகாப்பு அமைச்சு எச்சரிக்கை விடுத்து -படையினர் மிகவும் உஷார்ப் படுத்தப்பட்டிருந்த வேளையில்- இந்தத் தாக்குதலை நடத்தி வெற்றி வாகை சூடியது விடுதலைப் புலிகள் போர் ஆற்றலை மீண்டும் ஒரு தடவை வெளிக்காட்டியது.

### இதயபூமி 1 உணர்த்தும் செய்தி

இரண்டாவது ஈழப் போர் எனப்படும் போர் தொடங்கப்பட்ட பின்னர் முற்றுகைக்கு உள்ளாக்கப்பட்டிருந்த கொக்காவில், கொண்டச்சி, கோட்டை, மாங்குளம் இராணுவ முகாம்கள்கைப்பற்றப்பட்டு தகர்க்கப்பட்டபோது தமிழீழத்தின் மீதும் விடுதலைப் புலிகள் மீதும் உலகின் கவனம் மீண்டும் திசை திருப்பப்பட்டது.

ஆனையிறவுச் சமர் இலங்கைத் தீவில் இரண்டு இராணுவங்கள் இருக்கின்றன என்ற கருத்தை விதைத்தது.

இதயபூமி ஒன்றில், மண்கிண்டிமலை இராணுவ முகாம் தகர்ப்பு மேலும் பல செய்திகளை சொல்வதாகவேயுள்ளது.

ே ந்திர முக்கியத்துவம் வாய்ந்த மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இந்த இராணுவ நடவடிக்கை விடுதலைப் புலிகளின் கைகளுக்கு நவீன ஆயுதங்களை கொண்டுவந்து சேர்த்ததுடன் மட்டும் நிற்கவில்லை.

'விடுதலைப்புலிகள் பலவீனப்பட்டுப் போயுள்ளனர்' என்று சிறிலங்கா அரசு கொண்டிருந்த கனவைக் கலைத்தது.

வடக்கையும், கிழக்கையும் சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவது மூலமும், இராணுவ முகாம்களை அமைப்பது மூலமும் பிரித்துவிட முடியும், தமிழர் தாயகத்தின் புவியியல் தொடர்ச்சியை துண்டித்துவிட முடியும், என்ற இராணுவத்தினதும், அரசினதும் எண்ணத்தை சிதறடித்தது.

சிறிலங்கா இராணுவத்தின் பாதுகாப்பில் சிங்கள மக்களுக்கு இருந்த நம்பிக்கையில் ஓட்டை விழச் செய்தது.

கற்பூரத்திற்கும், பற்றரிக்கும், பெற்றோலுக்கும் தடைவிதிப்பதன் மூலம் புலிகள் நடத்தும் விடுதலைப்போராட்டத்தை நலிவடையச் செய்பலாம். பொருளாதாரத் தடை விதிப்பால் விடுதலைப் போராட்டத்தை நசுக்கலாம் என்பது தப்பான முடிவு என நிரூபிக்கப்பட்டது.

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்கள். காவல் கடமையில் இருந்தவர்கள் துப்பாக்கிகளை இறுகப் பிடித்தபடி தத்தம் காவல் அரண்களிலிருந்து இருளை ஊடறுத்துப் பார்த்துக் கொண்டிருந்தனர். சிலிர்ப்பூட்டும் காற்று மரக்கிளையை தடவிச் செல்லும் அந்தச் சப்தம் மட்டும் தான் சலசலப்பை ஏற்படுத்தியது.

திடீரென ஆர். பி. ஜிக்கள் முழங்கின. கொக்குத்தொடுவாய், மற்றும் கோவில் முனை இராணுவ முகாம்கள் ஒரே சமயத்தில் தாக்குதலுக்கு இலக்காகின. மண்கிண்டிமலை இராணுவ முகாமிலிருந்து உதவி வரும் என எதிர்பார்த்த இம் முகாமிலிருந்த இராணுவத்தினர் ஏமாற்றமே அடைந்தனர் மண்கிண்டிமலை இராணுவ முகாம் செய்தித் தொடர்பையே இழந்து விட்டிருந்தது. 12 கிலோ மீற்றர் தொலைவுக்கு அப்பாலுள்ள கஜபாகுபுர முகாமிற்கு தகவல் பறந்தது. அங்கிருந்தும் மண்கிண்டி மலையுடன் தொடர்பு கொள்வது சாத்தியமற்றுப் போனது.

**சிங்கள ஆட்சியாளர்களின் நோக்கத்தின் மீது-அந்த நோக்கத்தை எட்ட அவர்கள் வகுத்திருந்த போர்த்திட்டத்தின் மீது-அப் போர்த்திட்டத்தின் மூலம் பெற்று வரும் 'வெற்றி' பற்றிய நம்பிக்கையின் மீது - முதலாவது பலமான பேரிடியாக விடுதலைப் புலிகள் நடத்திய இதய பூமி 1 இராணுவ நடவடிக்கை விளங்கியது. இதய பூமி 1 வெற்றி நாளின் முதலாமாண்டு நிறைவு நாள் இன்று.**

''கொக்குத் தொடுவாய்க்கும் கோவில் முனைக்கும் கஜபாகுபுரத்திலிருந்து உதவிப்படைகள் விரைந்த பொழுது மண்கிண்டி மலையிலிருந்த முகாமின் பொறுப்பதிகாரி கப்டன் வசந்தா பெரேரா உட்பட பதின் நான்கு பேர் மட்டும் உயிர்தப்பி ஓடிக்கொண்டிருந்தனர்'' இப்படி இதய பூமி ஒன்றின் ஆரம்பகட்டத் தாக்குதல் பற்றி விபரித்துள்ளார் சிறிலங்கா சிப்பாய் ஒருவர்.

இன்னுமொரு சிப்பாய் கூறுகையில், ''நாங்கள் முற்று முழுதாகவே ஆச்சரியத்தில் மூழ்கிப் போனோம், ஆர் பி ஜி. ஏவப்படும் சத்தங்கள் கேட்டபோது, முன்னணிக் காவல் அரண்களில் இருப்பவர்கள் பதில்

கொண்டு அது பின்வருமாறு எழுதியது

கடந்த சனிக்கிழமை மட்டுமல்ல கடந்த வாரம் முழுவதிலும் இலட்சக்கணக்கான கிரிக்கட் பிரியர்கள் ''பிந்திய ஓட்டஎண்ணிக்கைஎன்ன?'' என்பதை அறிவதில் ஆர்வம் கொண்டிருந்த அதேவேளை ஜனகபுர (மண்கிண்டிமலை)யில் பயங்கர இழப்புநேரிட்டது.

ஏறக்குறைய் 500 பேர் வரையில் கொண்ட புலிகள் அணி, மின்னல் வேகத்தில், பிரமிக்கத்தக்க நுட்பத்துடன் தாக்கி ஐந்து கோடி ரூபாவுக்கும் மேல் பெறுமதியுடைய ஆயுதங்களை அள்ளிச் சென்றனர்.

புலிகள் பெற்ற வெற்றியை ஒப்புக்கொண்ட அதேவேளை சிறிலங்காவின் வெட்கத்துக்குரிய தேசியநாள் இது என்றும் அப்பத்திரிகை பிரகடனம் செய்தது.

நாட்டிற்கு வந்துள்ள ஆபத்தைக் கணக்கில் எடுக்காமல் கிரிக்கட் விளையாட்டில் சிங்களவர் ஆர்வம் காட்டுவதாக சீறிப்பாய்ந்த 'ஐலன்ட்' பத்திரிகையோ 'விழித்தெழு' (Wake up) எனச் சிங்களவர்களுக்கு அறைகூவல் விடுத்தது.

''இந்த வருடத்தின் மோசமான இழப்பு இது' என்று கணிப்பீடு செய்த 'டெயிலிநியூஸ்' தனது ஆசிரிய தலையங்கத்தில் ''இந்தப் போர் நிறுத்த முடியாத ஒரு கட்டத்திற்குச் சென்றுவிட்டது என்பதுடன் புலிகள் இயக்கத்தின் வீரியம் எந்த வகையிலும் குறைந்து விடவில்லை என்பதையும் எடுத்துக் காட்டுகிறது'' எனத் தெரிவித்தது

1990 யூலையில் கொக்காவில் முகாம் அழிப்பு, 1991 யூலையில் ஆனையிறவுச் சமர், 1992 யூலையில் வை - 8 விமானம் 19 அதிகாரிகளுடன் சுட்டுவீழ்த்தப்பட்டது. 1993 யூலையில் இதயபூமி ஒன்று இராணுவ நடவடிக்கை, என்றவாறாக ஒவ்வொரு யூலையும் சிறிலங்கா இராணுவத்திற்கு கடுமையான சோதனை நிறைந்த நாட்களாக நீடிக்கிறது.

வேட்டைக்காரர்கள் இப்போது வேட்டையாடப்பட்டுள்ளனர் என்ற தலைப்பில் உருவகப் பாணியிலான கட்டுரை ஒன்றை எழுதி சண்டே ஐலன்ட் தன் ஆதங்கத்தை வெளியிட்டது.

''இரவில் நடப்பவற்றை அவதானிப்பதற்கு விசேட கண்ணாடிகள் எதுவும் தேவைப்படாத ஆந்தை தனது சகாக்களுக்கு மண்கிண்டிமலையில் நடந்தவற்றை விலாவாரியாக விளக்கியது'' எனத் தொடங்கிய அக் கட்டுரையில் ''சாதாரண குடியான

ளதாக பொது ஜன ஐக்கிய முன்னணி ஏற்கனவே உறுதி கூறியிருப்பினும், இவ்வாறானதொரு கேள்வி கடந்த கால வரலாற்றின்அடிப்படையில் அவசியமானதொன்றே ஆகும். ஏனெனில் சிங்கள அரசியல் தலைவர்கள் ஏற்கனவே தமிழருக்குக் கொடுத்த வாக்குறுதிகள், செய்து கொண்ட ஒப்பந்தங்கள் எவற்றையும் நிறைவேற்றவில்லை.

இந்நிலையில் புதிய வாக்குறுதிகள், தேர்தல் விஞ்ஞாபனங்கள் எந்தளவிற்கு நம்பிக்கைத் தன்மை உடையவை என்பதில் கேள்விகள் எழுப்புவதில் தவறில்லை. சந்தேகப்படுவதில் நியாயமும் உண்டு. ஏனெனில் அன்றைய சிங்கள தலைவர்கள் இன்றில்லாது இருக்கலாம். புதிய தலைவர்கள் வந்திருக்கலாம். ஆனால் சிங்களப் பேரினவாதச் சிந்தனையும், சிங்களப் பேரினவாதிகளும், அரசியலுக்கு இனவாதத்தைப் பயன்படுத்தும் சூழ்நிலையும் இன்னமும் மாறவில்லை.

அடுத்ததாக பொது ஜன ஐக்கிய முன்னணி 'உண்மையாகவே' இனப்பிரச்சினைத் தீர்வில் அக்கறைகொண்டதாக இருக்குமாயினும், தீர்விற்கான தொலைவை அது இன்னமும் எட்டவில்லை என்றே அதன் அறிவிப்புக்களும், பேச்சுக்களும் உணர்த்துகின்றன.

இனப்பிரச்சினைக்கு" அரசியற்தீர்வு என்பது வடக்கு-கிழக்கு இணைப்புடன் கூடியதுதான் என்பது தமிழர் தரப்பைப் பொறுத்து முடிந்த முடிவாகிவிட்டது. அடுத்ததாக இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சி முறையின் கீழ் தீர்வு காண்பதென்பது சாத்தியமான விடயமல்ல என்பதை உலகமே தற்பொழுது ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்நிலையில் வடக்கு-கிழக்கு இணைப்பை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்ற சுதந்திரக்கட்சியின் அறிவிப்பும், ஒற்றையாட்சியின் கீழ் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற பிரகடனம் பிரச்சினைக்கு எந்தளவில் தீர்வைக் கொண்டு வந்துவிடப் போகின்றன. அதாவது வடக்கு-கிழக்கு இணைப்பு என்பதைக் கூறவும், கூட்டாட்சி, சமஷ்டி போன்ற சொற்களை உச்சரிக்கவும் தயங்கும் போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியினால் என்ன வேறு எவராலுமே இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியற் தீர்வைக் காண முடியாது.

இந்நிலையில் 'உண்மையாகவே' இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு விரும்புகின்றோம் எனக் கூறிக்கொள்வதினால் மட்டும், எவரும் சிக்கலடைந்து போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டுவிட முடியாது. இனப்பிரச்சினைக்குஎவராவது தீர்வுகாணஉளப்பூர்வமாக விரும்புவார்களேயானால், அவர்கள் முதலில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளவும், ஏற்றுக் கொள்ளவும் வேண்டும். தமிழர்களின் அச்சத்தைப் போக்கும் வகையில் தீர்வை முன்வைக்க வேண்டும் இல்லாது போனால் உண்மையாக இருந்தால் என்ன? உளப்பூர்வமாக இருந்தால் என்ன? எதுவும் அரைக் கிணறு தாண்டிய முயற்சியாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த இதயத்தில் கால் பதிக்க முனைந்த எதிரிகளுக்கு தகுந்த பாடம் புகட்ட மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைதான் இதய பூமி 1.

இன்று இதய பூமி 1 இராணுவ நடவடிக்கையின் முதலாவது ஆண்டு நிறைவு நாள். ஏறக்குறைய ஏழு மைல் பிரதேசத்தை இராணுவத்தின் பிடியிலிருந்து விடுவித்து- துடைத்து துப்புரவாக்கிய இந்த அதிரடி நடவடிக்கையில் நிலைநாட்டப்பட்ட சாதனைகள்- படிப்பினைகள்- நெஞ்சில் ஆழப்பதிந்த தியாக நினைவுகள்-மனதில் பதிந்த நிகழ்வுகள் எண்ணில் அடங்காதது.

சாதனை, படிப்பினை நிறைவு, நினைவு அனைத்தும் நிறைந்த இதய பூமி 1 நடவடிக்கை தமிழீழ விடுதலைப் போரின் புதிய வரலாற்றுப் பதிவு என்பது மிகைப்படுத்தப்பட்டதல்ல.

மண்கிண்டிமலை இராணுவ முகாமும்-அதனருகேஅமைந்தஇரண்டு இராணுவ மினி முகாம்களும், இவற்றைச் சூழ திட்டமிட்டு அமைக்கப்பட்டிருந்த ஆயுதம் தரித்த சிங்கள ஊர்காவல் படையினரின் நிலைகளும் முப்பதேமுப்பது நிமிடங்களில் 25-07-93 அன்று விடுதலைப் புலிகளால் துடைத்துதுப்புரவாக்கப்பட்டது.

ட்டத்தை நலிவடையச் செய்யலாம். பொருளாதாரத் தடை விதிப்பால் விடுதலைப் போராட்டத்தை நசுக்கலாம் என்பது தப்பான முடிவு என நிரூபிக்கப்பட்டது.

கனரக ஆயுதங்களை - எண்ணற்ற வகையில் இழந்து சிறிலங்கா இராணுவம் தனது இருப்பை கேள்விக் குறியாக்கியதுடன் கேலிக்குரியதாகவும் ஆக்கிக்கொண்டது.

அரசுத் தலைமை, கூட்டுப்படைத் தலைமை, இராணுவத் தளபதி என வெவ்வேறு மட்டங்களில் விசனமும் முரண்பாடும் முளைவிடுவதற்கு தளமமைத்தது.

இராணுவத் தளபதிகள் முதல் சாதாரண சிப்பாய்கள் வரை மன உறுதியைக் குலையச் செய்தது.

இவை அனைத்தையும் சாதித்த இதய பூமி 1 விடுதலைப் புலிகள் தரப்பில் ஒரு உந்து சக்தியாக உறுதியை வளர்த்துள்ளது.

## நடந்தது என்ன ?

ஜூலை 25, 1993, ஞாயிற்றுக்கிழமை.

மணிக்கூட்டின் இரண்டு கைகளும் சந்தித்த நள்ளிரவுப் பொழுது காவல் கடமை முடித்த சிப்பாய்கள் கிரிக்கட் போட்டியையும் கவனத்தில்

ஆச்சரியத்தில் மூழ்கிப் போனோம், ஆர் பி ஜி. ஏவப்படும் சத்தங்கள் கேட்டபோது, முன்னணிக் காவல் அரண்களில் இருப்பவர்கள் பதில் தாக்குதல் தொடுப்பார்கள் என்றே எதிர்பார்த்தோம். ஆனால் எமது முகாமில் இருந்த பலவீனமான ஒரு பாதை வழியாக புலிகள் முகாமினுள் நுழைந்து எங்களை திணறடித்து விட்டார்கள். அதன்பின் எமது கூடாரங்களுக்குள்ளேயே வேட்டுச் சத்தங்கள் கேட்டது. எங்களுடைய சகாக்கள் எல்லாப் பக்கத்தாலும் ஓடிக் கொண்டிருந்தனர் என்றார்''

## சிறிலங்காவின் அதிர்ச்சி

வெற்றிகரமாக முடிவடைந்த இந்த மண்கிண்டிமலைமுகாம் தகர்ப்பானது தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்திய வெற்றிக்களிப்பையும், நம்பிக்கையையும் விட சிறிலங்காவில் அது ஏற்படுத்திய அதிர்ச்சியும்- ஆத்திரமும், விரக்தியும் மிக அதிகம்.

''வெட்கத்திற்குரிய நாள்'' என்று வர்ணித்து ஆசிரிய தலையங்கம் எழுதியது சண்டே டைம்ஸ் அப்போது நடந்து கொண்டிருந்த சிறிலங்கா- இந்திய அணிகளுக்கு இடையிலான

தனது சகாக்களுக்கு மண்கிண்டிமலையில் நடந்தவற்றை விலாவாரியாக விளக்கியது'' எனத் தொடங்கிய அக் கட்டுரையில் ''சாதாரண குடியானவர்கள் போலவும், சிறுவியாபாரிகள் போலவும் நடித்து புலிகள் இயக்கத்தின் வேவுப் பிரிவினர் முகாமின் முக்கிய தகவல்களை சேர்த்துக் கொண்டனர். முன்னரே அவதானிக்கப்பட்டவற்றின் அடிப்படையில் நுட்பமாக திட்டமிட்டு தாக்குதல் நடத்தினர்'' என விபரித்தது.

எது பிழையாகிப் போனது? இது சண்டே ஐலண்டில் பிரசுரமான இன்னுமொரு கட்டுரையின் தலைப்பு.

1984-ம் ஆண்டில் தமிழர்களை இராணுவத்தினர் பலவந்தமாக மிக மிகக் குறுகிய கால அவகாசத்தில் வெளியேற்றிய நிலப் பகுதியில் 1985-ல் சிங்களவர்கள் இராணுவப் பாதுகாப்புடன் குடியேற்றப்பட்டனர். இதனை ஒழிவு மறைவின்றி ஒப்புக் கொண்டது அக் கட்டுரை

அத்துடன் சிறிலங்காவின் பாதுகாப்பு வட்டாரங்களை முழுமையாக உலுக்கி விட்டுள்ள வெற்றிகரமான இத் தாக்குதலின் மூலம் விடுதலைப் புலிகள் 83 யூலையின் பத்தாவது ஆண்டை புலிகள் நினைவுபடுத்தியுள்ளனர் என்வும் தெரிவித்தது

---

# கராச்சியில் துப்பாக்கிச் சூடு குழந்தை உட்பட 7 பேர் பலி

பாகிஸ்தானில் நேற்று முன்தினம் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் சுமார் ஏழுபேர் கொல்லப்பட்டுள்ளனர். கராச்சிநகரில் தொழுகை முடித்துவிட்டு பஸ்ஸில் திரும்பிக் கொண்டிருந்த ஷியா முஸ்லிம்கள் மீது அடையாளம் தெரியாத ஆட்கள் இத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். இதனால் ஏழு வயதுக் குழந்தையொருவர் உட்பட ஏழு பேர் கொல்லப்பட்டனர் மேலும் 25 பேர் வரையில் படுகாயமடைந்துள்ளனர்.

# துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் தர்மபுரியில் ஒருவர் பலி

தர்மபுரி மாவட்டம் கோட்டப்பட்டி வனப்பகுதியில் சந்தன மரங்களைக் கடத்த முயன்ற ஒரு குழுவுக்கும, வனத்துறை அதிகாரிகளுக்கும் இடையே நடைபெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

மரங்கள் கடத்தப்படுவதாக கிடைத்த புகாரைத் தொடர்ந்து வனத்துறை அதிகாரிகள் விரைந்ததாகவும், அப்போது கடத்தல்காரர்கள் அவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், அதனால் அதிகாரிகள் திருப்பிச் சுட நேர்ந்ததாகவும் கூறப்படுகிறது. இத் துப்பாக்கிப் பிரயோகத்தில் கடத்தல்காரர் குழுவைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார்.

# ஆசியானில் வியட்னாம்

ஆசியான் அமைப்பு தனது ஏழாவது உறுப்பு நாடாக வியட்னாமை சேர்க்க முடிவு செய்துள்ளது. இந்த சங்கத்தில் சேர்வதற்கான நடைமுறைகளை, அடுத்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெறும் அமைப்பின் உச்சிமாநாட்டிற்கு முன்னதாக செய்து முடிக்கப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# அமெரிக்க உதவி அதிகரிக்கும்

(வாஷிங்டன்)

ருவாண்டா அகதிகளுக்கான அமெரிக்க நிவாரண உதவியை அதிகரித்திருப்பதாக அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் கூறியுள்ளார்.

ஒரு தலைமுறைக் காலத்திற்கு ஏற்பட்டுள்ள மிகவும் மனிதாபிமான நெருக்கடி இது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யூதர்நிலையகுண்டுவெடிப்பு முஸ்லிம்குழு உரிமைகோரல்

கடந்த திங்களன்று ஆர்ஜன்டீனாவில் யூதர்நிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு, தாமே பொறுப்பு என தென் லெபனானைச் சேர்ந்த முஸ்லிம் அமைப்பு ஒன்று உரிமை கோரியுள்ளது.

குண்டுவெடிப்பில் கட்டிடச் சிதைவுகளுக்குள் சிக்குண்டவர்கள் தொடர்ந்தும் மீட்கப்படுகிறார்கள். இந்த சம்பவத்தில் 100 பேருக்கும்மேல் இறந்திருக்கலாமென தெரியவருகிறது.

இஸ்ரேலுக்கு வெளியே, யூதர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட பாரிய தாக்குதல் இது எனக் கூறப்படுகின்றது.

# நாட்டு வெடிகுண்டுகளுடன் இளைஞர் ஒருவர் கைது

(சென்னை)

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த மகாதேவன் குளம் என்னும் இடத்தில் நாட்டு வெடி குண்டுகள் சிலவற்றை வைத்திருந்த ஒருவர் பொலிஸாரால்கைதுசெய்யப்பட்டுள்ளார். இவரிடமிருந்து 11 குண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. முன் விரோதம் காரணமாக சிலர் தம்மைத் தாக்கக் கூடும் என்பதால் இந்த வெடிகுண்டுகளை வாங்கிவைத்திருந்ததாகஅவர் பொலிஸ் விசாரணையின் போது கூறியுள்ளார்.

## மரண அறிவித்தல்கள்



### மெல்லிசைக் கலைஞர்

பக்திப்பாடல் அரசு

### ஏ. ஆர். சிறிகிருஷ்ணமூர்த்தி

(யாழ். மாநகர சபை ஊழியர்)

மெல்லிசைக் கலைஞர், பக்திப்பாடல் அரசு ஏ.ஆர். சிறிகிருஷ்ணமூர்த்தி அவர்கள் 23.7.94 அன்று இரவு காலமாகிவிட்டார். இவர் இந்திராணியின் அன்புக் கணவரும், தர்மசீலன் (சிறி கண்ணன் இன்டஸ்றீஸ்), குணசீலன் (சகிலா மருந்தகம்), மாலதி, ஜெயசீலன் (கொழும்பு), ஞானசீலன் (மாருதி வீடியோ விஷன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் சிவகௌரி, சகிலா, சிவயோகரன், சியாமளா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் புகழுடல் 25.7.94 இன்று மாலை 2 மணிக்கு 19/1 B A. தம்பி ஒழுங்கை வண்ணார்பண்ணை என்ற முகவரியிலுள்ள அவரது இல்லத்தில் இருந்து கோம்பையன்மணல் மயானத்திற்குத் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்

குடும்பத்தினர்

(சி/9981) (மாருதி வீடியோ விஷன்)

### சபாரட்ணம் - சிவஞானசுந்தரம்

(தெய்வேந்திரம்)

பொலிகண்டி மேற்கு மாவடைப்பை வசிப்பிடமாகக்கொண்ட சபாரட்ணம் சிவஞானசுந்தரம் நேற்று இயற்கை மரணமடைந்து விட்டார். இவர் காலஞ்சென்ற ராஜேஸ்வரியின் அன்புக்கணவரும் ராஜ்குமார், சுகந்தினி, பாலதர்ஷினி ஆகியோரின் அன்புத்தந்தையும் திருமதி விக்னேஸ்வரராஜா வசந்தகோகிலத்தின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.7.94) காலை 9.00 மணியளவில் ஊறணி மயானத்தில் தகனம்

# நீங்கள் அறிந்தவற்றை இன்றைய இளைஞருடன்பகிர்ந்துகொள்ளுங்கள்

## 'சாளரம்' விழாவில் புதுவை இரத்தினதுரை

(யாழ்ப்பாணம்)

நாங்கள் இங்குள்ள படைப்பாளிகளிடம், அறிவு ஜீவிகளிடம் கேட்டுக் கொள்வது இதுதான் நீங்கள் அறிந்தவற்றை இந்தத் தலைமுறையிடம் பகிர்ந்து கொள்ளுங்கள் இது உங்களின் கடமை என்பதே.

சாளரம் சஞ்சிகையின் மூன்றாம் ஆண்டு நிறைவும் சிறப்பிதழ் வெளியீட்டு விழாவும் நேற்று யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது. சாளரம் ஆசிரியர் விவேக் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை அவர்கள் கலந்து கொண்டு பேசும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும் போது,

இன்னும் இந்த மண்ணில் நிறைய அறிஞர்கள் உள்ளவர் தமது பிள்ளைகளுக்கு அந்த அறிஞர்கள் தமது அறிவை வழங்க முயற்சிப்பது மாதிரி தமிழீழத்தில் உள்ள சகல பிள்ளைகளுடனும் அந்த அறிவை பகிர்ந்து கொள்ள முன்வர வேண்டும்.

இந்தப் போராட்டத்தில் பத்துப் பேருக்கு முன்னால் ஒரு மாதிரிக் கதைத்தும் இரண்டு பேருக்கு முன்னால் இன்னொரு மாதிரிக் கதைத்தும் இந்த மண்ணிலே சிலர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் நான் நினைக்கிறேன் எதிரிகளைவிட ஆபத்தானவர்கள் இவர்களே என்றார்.

திரு. வே. பாலகுமாரன் அங்கு பேசும் போது, எமது போராட்ட வளர்ச்சியைப் போலவே சாளரம் சஞ்சிகையும் இதனுடன் சேர்ந்து தனக்கு ஒரு வளர்ச்சியைக் கண்டிருப்பது உண்மையிலே பாராட்டப்படவேண்டிய ஒரு சங்கதிதான்.

இன்றைய அரசியல் சூழ்நிலை ஒரு புதிய போராட்ட காலகட்டமாக பரிணமிக்கப் போகிறது அதை எமது தலைமை எதிர்நோக்கத்தயாராக இப்போதே தகுந்த ஆயத்தங்கள் செய்து வருகிறது இறுதிப்போராட்டம் என்று சொல்லாவிடிலும் கூட இறுதியை அண்மித்த போராட்டத்திற்கு நாங்கள் தயார் படுத்துவதற்கு ஒரு சமூகத் தொகுதி இங்கு விழிப்பாய் இருத்தல் வேண்டும் என்றார்.

எழுத்தாளர் செம்பியன் செல்வன், நங்கூரம் ஆசிரியர் திரு ஐங்கரநேசன் ஆகியோர் அங்கு கருத்துரை வழங்கினார்கள். (தி)

# யார் ஆட்சிக்கு வந்தாலும் நாடு பிளவுறுவது நிச்சயம்

## தினேஷ் குணவர்தனா

(கொழும்பு)

ஐ.தே கவோ அல்லது பொதுஜன ஐக்கிய முன்னணியோ ஆட்சிக்கு வந்தால் நாடு பிளவுபடுவது உறுதி என தினேஷ் குணவர்தனா கூறியுள்ளார்-

மக்கள் விடுதலை முன்னணியின்தேர்தல்பிரசாரக் கூட்டத்தில்பேசிய அவர் ஐ. தே. க. தொண்டமானுடன் ஒப்பந்தம் செய்துள்ளது- சந்திரிகா அஷ்ரப்புடன் ஒப்பந்தம் செய்துள்ளார்: அஷ்ரப்பும் தொண்டமானும் ஒப்பந்தம் செய்துள்ளனர்- நாட்டை மூன்றாக பிளவுறும் நிலையை நாம் அனுமதிக்க முடியாது-

ஒருபுறம் வடக்கு-கிழக்கு இணைப்பிற்கு ஒப்பந்தம் மற்றையது மலையகத்தை தொண்டமானுக்கு தாரை வார்க்கும் ஒப்பந்தம் எனவும் அவர் குறிப்பிட்டார்-

# அசாம் அகதிமுகாமில் துப்பாக்கிச் சூடு 30க்கு மேற்பட்ட சடலங்கள் மீட்பு

(அசாம்)

அசாமில் உள்ள அகதி முகாம் ஒன்றில் தங்கியுள்ளவர்கள்மீது இனம்தெரியாத துப்பாக்கி நபர்கள் நடாத்திய தாக்குதலில் பலர் உயிரிழந்துள்ளதாகவும் இதில் 30 பேரது சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச் சமூகவிரோதிகள் தானியங்கித் துப்பாக்கிகளை வைத்திருந்தார்கள் எனவும் இச் சம்பவம் நடைபெறும்போது முகாமில் ஐயாயிரம் பேர் வரையில் தங்கியிருந்ததாகவும் கூறப்படுகிறது:

நேற்று முன்தினம் நடைபெற்ற இக் கோரச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களை பிடிக்கும் முயற்சியில் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# காணித் தகராறு கத்தி வெட்டில் முடிந்தது

உறவினர்களுக்கிடையில் ஏற்பட்ட காணித் தகராறு ஒன்று தீவிரமடைந்து கத்தி வெட்டில் முடிவடைந்துள்ளது நேற்று வரணியில்இடம் பெற்ற இச்சம்பவத்தின் போது குடும்பப்பெண் ஒருவர் உட்பட மூன்று பேர் சம்பவத்தில் காயமடைந்த ஒருவர் தெரிவித்தார் ''இத்துடன் உங்களை முடித்து விடுகிறேன் பார்'' என்று உரக்கக் கத்தியபடி தன்னை கத்தியொன்றால் வெட்டியதாகவும் அவர் தெரிவித்தார்

இச்சம்பவத்தில் எஸ் கணேச

## சர்வதேச

யில் செயற்படவுள்ளனர் இக் குழுவினர் சகல கட்சியினரையும் சந்தித்து பேசுவதற்காக இவர்களுக்கென விசேட செயலகமும் அமைக்கப்படவுள்ளது.

## வடக்கு கிழக்கு

இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்

கேள்வி; வடக்கு- கிழக்கு பிர

# தமிழ்மொழி பெயர்ப்பலகை திடீர் மறைவால் திகைப்பு

சிலாபத்தில் தமிழ் மொழியில் காணப்பட்ட பெயர்ப் பலகைகள் திடீரென காணாமற் போயுள்ளன. சிங்கள, ஆங்கில பெயர்ப் பலகைகளே காணப்படுகின்றன.

இம் மாற்றத்தினால் இங்குள்ள தமிழ் பேசும் மக்கள் திகைப்படைந்துள்ளனர்.

சிலாபம் மாநகர சபையே இதற்குக் காரணம் எனக் குற்றஞ் சாட்டப்படுகின்றது.

# சமாதானமும் அமைதியும் ஏற்படவே பாடுபடுகின்றோம்

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் பூரண அமைதியும் சமாதானமும் ஏற்படவேண்டும் இதற்காக அரசு உழைத்து வருகிறது. பேச்சுவார்த்தைக் கதவுகள் அகலத் திறந்துள்ளன. சம்பந்தப்பட்டவர்கள் எம்முடன் பேச முன்வந்தால் அதனை மக்கள் அறியும் வகையில் நாம் அதை முன்னெடுத்துச் செல்வோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சம்மாந்துறையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில், இது ஒரு சிக்கலான பிரச்சினை. இதை அமைதியாக இருந்து ஒற்றுமையான பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கவேண்டும். அதற்கான அங்கீகாரத்தை இத் தேர்தல் மூலம் மக்களிடம் வேண்டுகின்றோம் என அவர் கேட்டுக்கொண்டார்.

# அவசரம் என்பதாலேயே தீர்வுதிட்டம்முன்வைத்தோம்

## தொண்டமான் தெரிவிப்பு

வடக்கு-கிழக்கு பிரச்சினை மிக முக்கியமானது- அதற்கான தீர்வு மிக அவசியமும் அவசரமும் ஆகும்- அக்காரணத்தினாலேயே நானும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான அஷ்ரப்பும்வட-கிழக்கு தீர்வு திட்டத்தை தயாரித்து அரசிடம் கையளித்தோம் என அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் மாநாட்டில் பேசிய தொண்டமான், எதிர்வரும்தேர்தலுக்கும்எமது தீர்வு திட்டத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை-இத் திட்டம் பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்பே கையளிக்கப்பட்ட தொன்றாகும் என்றார்-

# ஐக்கிய தேசியக் கட்சியே ஆட்சியை அமைக்கும்

## ஒப்சோபரின் கணிப்பு இது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையில் தொடர்ந்து பெரும்பான்மை மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளார்கள் என்றும் எனவே தொடர்ந்தும் ஆட்சியை ஐக்கிய தேசியக் கட்சியே அமைக்கும் எனவும் ''சண்டே ஒப்சேபர்'' தெரிவித்துள்ளது.

இலங்கையில் வாக்காளர்களில் ஐம்பத்தி எட்டு சதவீதத்தினர் ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளில் தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டுள்ளதாக தாம் எடுத்த கருத்துக் கணிப்பீட்டின் மூலம் தெரியவந்ததாக அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது

# தேர்தல் முடிவு அறிவிக்க தனியார் ரி.விக்கு தடை

(கொழும்பு)

தேர்தல் முடிவுகளை தனியார் தொலைக்காட்சி நிறுவ

னங்கள் எதுவும் முதலில் அறிவிக்க அனுமதி வழங்கப்பட

அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.7.94) காலை
9.00 மணியளவில் ஊறணி மயானத்தில் தகனம்
செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்
பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளைகள், மைத்துனர்

(8935)

## திருமதி முருகேசு முத்தம்மா

(வட்டுக்கோட்டை)

திருமதி முருகேசு முத்தம்மா 23-07-94 அன்று
காலமானார். இவர் காலஞ்சென்ற தாமோதரம்
பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற
முருகேசு (Financial Assistant Malayasia) அவர்
களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மு. கதிர
வேற்பிள்ளை, காலஞ்சென்ற Dr. மு. ராஜதுரை
(Malayasia), காலஞ்சென்ற மு. அம்பலவாணர், Dr.
மு. நடராஜா, திருமதி க. தையல்நாயகி, வே. வள்ளி
யம்மை, திருமதி ச. பார்வதி ஆகியோரின் அன்புத்
தாயாரும், திருமதி க. சிவகடாச்சம்மா, காலஞ்சென்ற
ம. கதிரவேலு (சட்டத்தரணி), காலஞ்சென்ற Dr.
K. வேலாயுதம், திருமதி இ. ரத்தினம் (Malayasia)
அ. தையல்நாயகி, சு. சண்முகநாதன், திருமதி ந.
கமலேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி
வி. நீலாம்பிகை, திருமதி S. தங்கநாயகி, திருமதி
செ. நீலாம்பிகை (Australia) Dr. க. திருநாவுக்
கரசு (Aust), க. மகாதேவா (இளைப்பாறிய அர
சாங்க அதிபர்), க. சிவானந்தன் (சட்டத்தரணி
Aust.) திருமதி இ. கமலாம்பிகை (Aust.), Dr. இ.
முருகேசு (Aust.) திருமதி ஜெ. ஈஸ்வரி (Malayasia),
Dr R. இராஜேஸ்வரி (Malayasia) Dr. R. பொன்
னம்மா (Malayasia) திருமதி ந. புனிதவதி, திரு.
அ. காண்டீபன் (கணக்காளர் Canada), திருமதி
க. கௌரிமலர், Dr. ந. செந்தில்குமார் (America),
Dr. ந. சிறீகுமார் (America), செல்வி ந. கமலினி
(மருத்துவமாணவி அபடீன் பல்கலைக்கழகம் U.K)
ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், வி மனோமயீ
(Nigeria), வி. வித்தியா, வி. கணேஷ்குமார் (Nige-
ria), வி. ஆனந்தசுரேஸ் (Nigeria), வி. சுபாஸ்
கரன் (Nigeria), S. சயந்தன், S. சுஜித்தா, S.
தியாகராஜன், செல்வன். ஆனந்தன் (Aust) றொகான்
(Aust), தயாளன் (Aust), ஜெ. மேகலா (Aust),
கிரிஷான் (Aust), ம. சுனித்தா (Aust), சி. அர்ச்
சுனா (Aust), சி. சிவாங்கர் (Aust), N. யசோ,
க. ஆரணி (கனடா), க. ஞானலக்சுமி (கனடா),
க. சுகாஸ், க. சுகர்ணா ஆகியோரின் அன்புப் பூட்
டியும் ஆவார் அன்னாரது ஈமக்கிரியைகள் 23-7-94
இல் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றது. இவ்வறி
வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்
கொள்ளவும்.

''குமரவேல்''
சங்கரத்தை வீதி,
வட்டுக்கோட்டை.

தகவல்:
க. கனகரட்னம்
(8931)

பெற்ற இச்சம்பவத்தின்
போது குடும்பப்பெண் ஒரு
வர் உட்பட மூன்று பேர்
பலத்த காயமடைந்துள்ளனர்

காணியொன்றில் வேலி
போடுவது தொடர்பாக ஏற்
பட்ட தகராறைத் தொடர்
ந்து ஒரு தரப்பு உறவினர்
கள் கத்திகள் சகிதம் வந்து
தம்மை வெட்டியதாக இச்

### துணைப்படைவீரர்

வீரச்சாவு அடைந்த வீர
வேங்கை ஆறுமுகம் தவராஜா
(உடுப்புக்குளம், அளம்பில்,
முல்லைத்தீவு) என்னும்
துணைப்படைவீரருக்கு தமி
ழீழ விடுதலைப் புலிகள் வீர
வணக்கம் செலுத்துகின்ற
னர்.

### சுவரொட்டி

ஆட்சேபித்ததுடன் நேற்று
முன்தினம் அனலைதீவில்
ஃவர்களால் ஹர்த்தாலும்
அனுஷ்டிக்கப்பட்டது.

### ஆட்லறி

மேனி, இடைக்காடு பகுதிகள்
மீது பலத்த சத்தங்களுடன்
விழுந்து வெடித்தன.

இதனால் அப் பகுதிகளில்
உள்ள மக்கள் குடியிருப்புக்
கள் பல சேதமடைந்தன.

(யோ)

### ரயிலில்

இருந்ததால் புகையிரத பரி
சோதகர்களால் அழைத்துச்
செல்லப்பட்டதாக இவருடன்
பயணித்த ஒருவர் கூறியுள்
ளார். அவ்வாறு அழைத்துச்
செல்லப்பட்ட அவர் குற்றப்
பணத்தை செலுத்தி விட்டு
திரும்பியிருக்கலாம். ஆனால்
அவர் கொழும்பிற்கு
செல்லவும் இல்லை
வீட்டுக்கு வரவுமில்லை. இவ
ரைத் தேடி மனைவி அலை
ந்து திரிகிறார்.

யொன்றால் வெட்டியதாக
வும் அவர் தெரிவித்தார்

இச்சம்பவத்தில் எஸ் கணேச
பாலேந்திரன் (வயது 34),
பி. கதிர்காமசோதிலிங்கம்
(வயது 29), க றஞ்சிதமலர்
(வயது 27) ஆகியோர் காய
மடைந்துள்ளனர்

சு. க.

அவ்விடத்தில் தரித்து நின்ற
நிமால் சிறிபால டிசில்வாவின்
காரைநோக்கி வேகமாகவந்த
''எவக்கிறீன்'' என்னும் பெய
ருடைய இந்த பஸ்வண்டி அவ
ருடைய காரின் மீது மோதி
யதாகவும் அவ்வாகனத்திலிரு
ந்து அசிட் வீசப்பட்டதாகவும்
தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு வீசப்பட்ட அசிட்
பாதசாரியான பெண் ஒருவர்
மீது பட்டு காயம் ஏற்பட்டது
என தெரியவருகிறது.

மேற்படி பஸ் வண்டி ஒரு
ஐக்கிய தேசியக்கட்சிமாகாண
சபை உறுப்பினருடையது
எனவும், இச்சம்பவம் ஒரு
கொலை முயற்சி எனவும்
குற்றம் சாட்டப்படுகிறது.

### பொதுஜன

பெற்ற கூட்டமொன்றில்,
அவர் பேசுகையில் பொது
ஜன ஐக்கிய முன்னணியினர்
ஐக்கிய இலங்கையைப் பற்றி
ஒருபோதும் கதைப்ப
தில்லை. நாம்தான் அவற்றை
அடிக்கடி பேசுகிறோம். மாற்
றம் தேவையென்பதற்காக
சந்திரிகாவிடம் நாட்டை ஒப்
படைப்பதா? அவரைத்
தவிர படிப்பறிவுள்ள திறமை
யானவர்கள் இல்லையா என
வும் அவர் கேள்வி எழுப்பியுள்
ளார்.

### கொழும்பு

கைவிட்டு ரயிலைவிட்டு இறங்
குகின்றனர்.

பின்பு பயணிகளுடன் ரயில்
புறப்பட்டதும் ரயிலில் ஏறும்
படையினர் அங்குவைத்தும்
அனைவரையும் பரிசோதிக்
கின்றனர்.

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம்
இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு
ஜூலை மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இதற்கான நடவடிக்கைகளை
மேற்கொள்வோம்

கேள்வி; வடக்கு-கிழக்கு பிர
ச்சினைக்கு தங்கள்
தீர்வு என்ன? இனப்பிர
ச்சினையை பயங்கரவாதப்
பிரச்சினை என ஜனாதிபதி
கூறுவதை நீங்கள் ஏற்கிறீர்
களா?

பதில்: ஜனாதிபதியின்கூற்றை
நான் ஏற்கவில்லை அவ்
வாறாக அது பெரிய விடய
மல்ல வடக்கு-கிழக்கு விட
யத்திற்கு நாம் முன்னுரிமை
வழங்குவோம் சிறுபான்மை
யினரின் பிரதிநிதிகளுடன்
கலந்தாலோசித்து அதிகாரப்
பகிர்வை வழங்குவோம் வட
க்கு இப்போது புலிகள் கட்
டுப்பாட்டில் உள்ளது.

### ஆதரவாளர்

வேல் சிவலிங்கம் (மாவடிச்
சேனை) என்பவர் வீரச்சா
வடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுத
லைப் புலிகள் வீரவணக்கம்
செலுத்துகின்றனர்.

### வரும்

டது. தோட்டத் தொழிலா
ளரை அரசு ஏமாற்றி விட்டது
தோட்டதொழிலாளருக்கு
சுபீட்சம் பொதுஜன ஐக்கிய
முன்னணியை ஆதரிப்பதில்
உள்ளது என அவர் மேலும்
தெரிவித்தார்.

**4-வது பிறந்ததின**
**வாழ்த்து**
**செல்வி தவபாலசிங்கம்**
**மயூரிக்கா**

நேற்றைய பத்திரிகை
யில் செல்வி தனபாலசி
ங்கம் மயூரிக்கா என்ப
தை செல்வி தவபாலசிங்
கம் மயூரிக்கா எனக்
கொள்க.

சிவமஹால்,
பருத்தித்துறை.

(8930)

தேர்தல் முடிவுகளை தனி
யார் தொலைக்காட்சி நிறுவ

### ஆபிரிக்காவின்

பெண்கள், அபிவிருத்திய
டைந்த நாடுகளின் பெண்க
ளிலும் பார்க்க இரு மடங்கு
குழந்தைகளைப் பெறுகிறார்
கள்.

ஆகக் கூடிய அதிகரிப்பு2.9
சதவீதமாக ஆபிரிக்க நாடுக
ளில் காணப்படுகின்றது. ஒவ்
வொரு 24 வருடங்களுக்கும்
ஆபிரிக்க சனத்தொகை இர
ண்டு மடங்காக அதிகரிக்கி
றது.

### ஜனாதிபதி

திலிருந்து வேறுபடத் தேவை
யில்லை. அவருடைய நிறைவே
ற்று அதிகாரம் பாராளுமன்
றத்துடன் ஒத்துப்போகாவிட்
டால் அவர் தமது அதிகா
ரத்தை தாமே கட்டுப்படுத்தி
கொள்ளவேண்டும் எனவும்
ஜெயவர்த்தனா தெரிவித்
தார்.

புதிய அரசியலமைப்பு திருத்
தத்திற்கு மூன்றிலிரண்டு
பெரும்பான்மையும் கருத்து
வாக்கெடுப்பு முறையும் அவ
சியம். விகிதாசார பிரதிநிதித்
துவத்தின்கீழ் அவ்வாறான
பெரும்பான்மை வருவது கடி
னம். அரசியலமைப்பு திருத்
தப்படுவது வீணான விரய
மாக்கும் நடவடிக்கை. இதற்கு
நேர்மை, பொறுமை என்ப
வற்றுடன் புத்திசாதுர்யமும்
அவசியம்.

ஜனாதிபதிக்கு பாராளுமன்
றத்தை கலைக்கும் உரிமை
இருப்பதைப்போன்றே பாரா
ளுமன்றத்திற்கும் அவரை
விலக்க அதிகாரமுண்டு.
ஆனால் அதற்கு போதியளவு
வாக்குகள் வேண்டும்.

தற்போதைய அரசியலுக்
கும் எனக்கும் எவ்வித
தொடர்பும் இல்லை. தான்
அரசு மீதோ ஐ.தே.க மீதோ
செல்வாக்கு செலுத்தவில்லை.
ஆனால் அனைத்து மட்டத்
தினரும் என்னுடன் தொடர்பு
கொள்கின்றனர் என அவர்
அப்பேட்டியின்போது மேலும்
குறிப்பிட்டார்.

னங்கள் எதுவும் முதலில் அறி
விக்க அனுமதி வழங்கப்பட
மாட்டாது. அப்படி அறிவிக்
கப்படுவதால் ஏற்படும் பிரச்
சினைகளுக்கு தேர்தல் ஆணை
யாளர் அலுவலகம் பதிலளிக்
கமாட்டாது என தேர்தல்
ஆணையாளர் எச்சரித்துள்
ளார்.

தேர்தல் முடிவுகளையும்
தேர்தல் தொடர்பான தேர்
தலுக்கு முந்தைய கருத்துக்
கணிப்பு வாக்கெடுப்பு முடிவுக
ளையும்வெளியிட கொழும்பில்
உள்ள சிலதனியார் தொலைக்
காட்சி நிறுவனங்கள் முயற்சி
செய்துவரும் இவ்வேளையில்
இவ் எச்சரிப்பு ஆணையாள
ரினால் விடுக்கப்பட்டுள்ளது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994. 07. 25**
**திங்கள் இரவு**

08. 01 - தளிர்கள்
08. 20 - செய்திச்சரம்
08. 30 - செய்திகள்
08. 40 - வெலிக்கடை படுகொலை, இதயபூமி1 நடவடிக்கை நினைவாக சிறப்பு நிகழ்ச்சி. ''வெட்டி வீழ்த்துவோம் பகையை''

**1994. 07. 26**
**செவ்வாய் காலை**

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - இன்றைய தாரகை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - தாயகப் பாடல்கள்.